ISBN:978-81-687272-2-9

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



தனிநாயகம் அடிகளார்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/101.%20%E0%AE%A4%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D%20%E0%AE%85%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1913

செந்தமிழ்சிறப்பிகள்

தனிநாயகம் அடிகளார் *(1913-1980)*



அறிமுகம்

தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் (Rev. Xavier S. Thani Nayagam, ஆகத்து 2, 1913 - செப்டம்பர் 1, 1980) ஈழத்துத் தமிழறிஞர், கல்வியாளர். தமிழ், ஆங்கிலம் தவிர எசுப்பானியம், உரோம மொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர்.[1] பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்து வெளிக் கொணர்ந்தார்.[2] தமிழ்க் கல்ச்சர் என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். 1964 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலினார். இந்த நிறுவனமே

தொடர்ச்சியாக எட்டு உலகளாவிய ரீதியிலான உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தியது. அடிகள் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடத்தப் பெற்றன. இவர் பொதுச் செயலாளராவிருந்து முதல் மகாநாட்டினை கோலாலம்பூரில் பல உலகநாடுகளின் தமிழ் ஆய்வாளர்களை வரவழைத்து வெற்றிகரமாக நடாத்திய பெருமை இவரைச் சார்ந்ததே.

பிறப்பு

தனிநாயகம் அடிகளார் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்துறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்ரனிசுலாசு, சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்குப் பிறந்தார். அடிகளாரது தந்தை நாகநாதன், மற்றும் அவரது தந்தைவழிப் பூட்டனார் தனிநாயக முதலி ஆகியோர் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்தே இவர் தமிழில் கொண்ட தீராத காதலினால் உரோமன் கத்தோலிக்க குருவாக நியமிக்கப்பட்டபோது தனது பெயரினை சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக் கொண்டார்.

கல்வி

தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில வழிக் கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார். இக்காலத்தில் ஆங்கிலம், இலத்தின், இத்தாலியம், பிரெஞ்சு, செருமன், எசுப்பானியம், போத்துக்கீயம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தொடர்ந்து உருசியம், கிரேக்கம், இபுரு, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்து ஒரு பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

திருவனந்தபுரம் மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது 1934 தொடக்கம் 1939 வரை உரோமை நகரில் வத்திக்கான் பல்கலைக்கழகம் சென்று The Carthaginian Clergy என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரையினை எழுதி தெய்வ தத்துவத்தில் (Doctor of Divinity) பட்டம் பெற்றுக் கொண்டார். இவ்வாய்வுக் கட்டுரை 1960இல் நூல் வடிவில்

வெளியானது. இங்கு படிக்கும்போதே இவருக்கு பன்நாட்டு அறிஞர்களின் தொடர்புகள் கிடைத்தது.

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கன்குளம் என்னும் ஊரில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் 1940 முதல் 1945 வரை துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். முறையான தமிழைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங்கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயில ஆரம்பித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றார்.

1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இரத்தினசாமி, மற்றும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைக் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கிலயத்தில் சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, எம்.லிட். பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்[1]. இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றது.

ஆசிரியப் பணி

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை

இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் முனைவர் பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக் கொண்டார். 1961 முதல் 1968ஆம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியாராகவும் பணியாற்றினார். இக்காலத்திலேயே பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களும் இங்கு பேராசியரியராகக் கடமையாற்றினார். 1969 இல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிசு மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இதழியலில்

தூத்துக்குடியில் பணியாற்றிய காலத்தில் தனிநாயகம் அடிகளார் தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பினை நிறுவி 1952 ஆம் ஆண்டில் Tamil Culture (தமிழ்க் கலாச்சாரம்) என்னும் ஆங்கிலக் காலாண்டு இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். இவ்விதழ் அமெரிக்க, ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் வரை சென்றடைந்தது. இதன் காரணமாக தமிழ் கற்கும் வேற்று மொழி இனத்தவர்களான சுவெலபில், பிளியோசற், அந்திரோனொவ், எமனு, குய்ப்பர், நோல்டென், மார், பொக்சர், பறோ ஆகியோர் இவ்விதழில் தொடர்ந்து தமது ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வந்தனர். 1961 இல் சென்னையில் "தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்" (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். முதல் தமிழாராச்சி மகாநாட்டினைத் தொடர்ந்து மலேசியாவிலிருந்து உலகத் தமிழ் ஆய்வு மையத்தின் சார்பாக "Journal of Tamil Studies" என்னும் ஒரு இதழுக்கான ஆசிரியராக சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றி பல சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளை வெளிக் கொணர்ந்தார்.

உலக நாடுகளுக்குப் பயணம்

1554 ஆம் ஆண்டில் லிசுபனில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி (Cartilha) நூல். 1950களில் தனிநாயகம் அடிகளாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு சப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஓர் ஆண்டிலேயே இருநூறிற்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார். இவ்வாறு விரிவுரைகளை நிகழ்த்தும் போது பல நாடுகளிலும் சிறப்பு பேராசிரியராகத் தமிழ்ப்பாடமும் நடத்தியுள்ளார்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் (International Association for Tamil Research, IATR) முதல் கூட்டம் தில்லியில் 1964 சனவரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ. ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர். மொத்தம் 26 தமிழறிஞர்கள் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1964 சனவரி ஜனவரி மாதம் 7 ஆம் நாள் ஆரம்பித்து வைத்தனர். அந்த அமைப்பின் முதல் தலைவராக பிரான்சு நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவராகவும், ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியர் தொமஸ் பரோ, அமெரிக்க நாட்டு பேராசிரியர் எமனோ, பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாடசிசந்தரனார், மு. வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் செக்கோசெவவாக்கியா, பிராக் பல்கலைக்கழக பேராசிரியர் கமில் சுவெலபில், தனிநாயகம் அடிகள் ஆகியோர் இணைச் செயலாளராளர்கவும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

கோலாலம்பூர் மாநாடு

முதன்மைக் கட்டுரை: முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ச்சியாக எட்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளை பல உலக நாடுகளில் நடத்தியது. அடிகளார் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மகாநாடுகள் நடைபெற்றன. இவர் பொதுச் செயலாளராவிருந்து முதல் மகாநாட்டினை 1966, ஏப்ரல் 16 - 23 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். 1961 ஆண்டில் அவர் மலாய் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றியது மிகவும் துணைநின்றது. அப்போது அமைச்சர்களாக இருந்த வி. தி. சம்பந்தன், வி. மாணிக்கவாசகம் ஆகியோருடன் அடிகளார் பேணிய நல்லுறவால் மலேசிய அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. மாநாட்டிற்கு மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தலைமை தாங்கினார். தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். பக்தவத்சலமும் கலந்து சிறப்பித்தார். புரொயென்காவின் போர்த்துக்கீச-தமிழ் அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார்[2]. சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆய்வு நூல்கள்

தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களும் எழுதி வெளியிட்டார். தமிழ்த் தூது (1952) என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார். அடிகாளார் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் முதல் தொகுப்பு "தமிழ்த் தூது" என்பதாகும். இது 1952 ல் வெளியிடப்பட்டது. அவரது உலகப் பயணங்களின் அனுபவங்கள் "ஒரே உலகம்" என்ற தலைப்பில் 1963ஆம் ஆண்டு வெளியிட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார்

ஆற்றிய தொடர்ச் சொற்பொழிவு “திருவள்ளுவர்” என்ற மகுடமிடப்பெற்று 1967ல் நூலாக வெளிவந்தது. அடிகளார் எழுதிய 30 ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் காலாசரம் சஞ்சிகையில் வெளிவந்த 70 கட்டுரைகள் பலவேறு இதழ்களிலும் கருத்தரங்க மலர்களிலும் வெளிவந்துள்ளன.

தமிழைப் பற்றிய ஐரோப்பிய மொழிகளில் வெளி வந்த நூல்களைத் தொகுப்பதன் மூலம் பன்னாட்டு ரீதியில் தமிழ்மொழியை உலகின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றார். "Reference Guide to Tamil Studies" என்ற 122 பக்கங்களைக் கொண்ட உசாத்துணை நூலில் 1335 நூல்களைப் பற்றிய குறிப்புக்களைச் சேர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூல் இலத்தின், பிரெஞ்சு, செருமனி, உருசியம், மலாய், ஆங்கிலம் போன்ற மொழிகளில் தமிழியல் பற்றி வெளிவந்த தகவல்களின் அடிப்படையில் ஒரு தொகுப்பு நூலாக விளங்கிற்று. தமிழாய்வில் ஈடுபட விரும்பும் வெளிநாட்டவருக்கு ஒரு உசாத்துணை நூலாக விளங்கவே இதனை வெளியிட்டார்.

இலங்கையிலிருந்து வெளியான சைமன் காசிச்செட்டி ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் புளூட்டார்க் என்ற நூலை பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரைக் கொண்டு கூடுதல் செய்திகளைச் சேர்த்து பிழை களைந்து வெளியிட ஏற்பாடு செய்தார்.

மறைவு

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் எழுதிய தமிழ்மறை விருந்துஎன்ற நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதன்பின், பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டம்பர் 1 மாலை 6.30 மணியளவில் உயிர் நீத்தார்.

கௌரவம்

1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவரது சிலை ஒன்றும் தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவரின் இறப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளின் தமிழ்ச் சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

நூற்றாண்டு விழா

சென்னையில் 2013 பெப்ரவரி 16 அன்று தனிநாயக அடிகளாரின் நினைவை போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்க விழா நடைபெற்றது.

(😊)(😊) @@@@@@@@@ (😊)(😊)

ஆய்வுகள்

- திருவனந்தபுரம் மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது 1934-1939 வரை ரோம் நகரில் வாட்டிக்கான் பல்கலைக்கழகம் சென்று

"The Carthaginian Clergy" என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை எழுதி தெய்வ தத்துவத்தில் (Doctor of Divinity) பட்டம் பெற்றார். இந்த ஆய்வுக்கட்டுரை 1960-ல் நூல் வடிவில் வெளியானது. இங்கு படிக்கும்போதே இவருக்கு பன்னாட்டு அறிஞர்களின் தொடர்புகள் கிடைத்தது.

- 1947-1949 வரை தமிழ் இலக்கிலயத்தில் சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, எம்.லிட். பட்டம் பெற்றார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றது.
- ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள் மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்தார். 1556-ம் ஆண்டில் தமிழில் அச்சிடப்பெற்ற Luso-Tamil Catechism (போர்த்துக்கீச-தமிழ் மொழியில் கிறித்தவம் சார்ந்த கேள்விக் கொத்து) "காட்டில்கா" (Cartilha) எனப் பெயரிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை தனிநாயகம் அடிகளார் 1950-ம் ஆண்டில் லிஸ்பனில் கண்டெடுத்தார்.
- 1578-ல் அச்சிடப்பெற்ற தம்பிரான் வணக்கம் (Thambiran Vanakkam) 1579-ல் வெளியிடப்பட்ட "கிறித்தியானி வணக்கம்"(Kiristiani Vanakkam). முதன் முதலாக அன்ரம் டீ பெறோனீக்கா என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ் - போர்த்துக்கீச மொழி அகராதி போன்றவற்றையும் கண்டெடுத்தார். அதில் பெறொனிக்கா அகராதியினை மீள்பதிப்பு செய்து அதனை முதல் தமிழாராச்சி மகாநாட்டில் மலேசியாவில் வெளியிட்டார்.
- தனிநாயகம் அடிகள் போர்ச்சுகலில் கண்டறிந்த Arte da Lingua Malabar என்ற கையேடே தமிழுக்காக அயலவர் எழுதிய முதல் இலக்கணக் கையேடு. தாளில் எழுதப்பட்ட இந்தக் கையேடு என்றீக்கு அடிகளால் 1549-ல் வழங்கிய போர்த்துக்கீசிய மொழியில் அக்காலத்துத் தமிழ் மொழியை விளக்குகிறது.இந்தக் கையேட்டை ஜீன் ஹைன் (Jeanne Hein) என்ற அமெரிக்கர் 2013 ஏப்ரலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

- மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராக எட்டு ஆண்டுக்காலம் பணிபுரிந்தபோது பல புதிய பொருள்பற்றியும் துறைகள் பற்றியும் அப்பல்கலைக்கழகத்தில் தமிழாய்வு நடைபெற வழிவகை செய்தார்.

அமைப்புப் பணிகள்



அறிமுக உரை: தனிநாயகம் அடிகள்: மலேசியா மாநாடு

உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்

1963--ம் ஆண்டளவில் தமிழக அரசில் எம். பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த போது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் தனிநாயகம் அடிகளார் உலக நாடுகளில் உள்ள தமிழறிஞர்கள் யாவரையும் ஒன்று திரட்டி ஒரு குழுவாக அமைத்து தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் தமிழாராய்ச்சி மகாநாட்டினை நடத்தும் யோசனையை முன்வைத்தார். இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையினையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. இதனை அடுத்து இம்மாநாட்டினைத் தாமே முன்னின்று உலகளவிலே நடத்த வேண்டும் என்ற உத்வேகம்

கொண்டதனால் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் உருவானது. 1964-ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்கக் காரணமானார்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் (International Association for Tamil Research, IATR) முதல் கூட்டம் தில்லியில் ஜனவரி 1964-ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ.ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டனர். 26 தமிழறிஞர்கள் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை ஜனவரி 7, 1964 அன்று ஆரம்பித்து வைத்தனர். அந்த அமைப்பின் முதல் தலைவராக பிரான்ஸ் நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவராகவும், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் தாமஸ் பரோ, அமெரிக்க நாட்டு பேராசிரியர் மர்ரே பான்சன் எமனோ, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், செக்கோசெவவாக்கியா, பிராக் பல்கலைக்கழக பேராசிரியர் கமில் சுவெலபில், தனிநாயகம் அடிகள் ஆகியோர் இணைச் செயலாளராளர்கவும் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிறுவனமே தொடர்ச்சியாக பத்து உலகளாவிய ரீதியிலான உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தியது. தனிநாயகம் அடிகள் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடத்தப் பெற்றன.

கோலாலம்பூர் மாநாடு

தனிநாயகம் அடிகள் பொதுச் செயலாளராவிருந்து முதல் மகாநாட்டினை ஏப்ரல் 16 - 23, 1966 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். 1961-ல் மலாய் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் தனிநாயகம் அடிகள் இருந்தார். அப்போதைய மலேசிய அமைச்சர்களான விதி. சம்பந்தன், வி. மாணிக்கவாசகம் ஆகியோருடன் தனிநாயகம் அடிகளார் பேணிய நல்லுறவால் மலேசிய அரசின் ஒத்துழைப்பு கிடைத்தது. மாநாட்டிற்கு மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தலைமை தாங்கினார். தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். பக்தவத்சலமும் கலந்து கொண்டார்.

புரொயென்காவின் போர்ச்சுகீசிய-தமிழ் அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார். சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நூல் பட்டியல்



தனிநாயகம் அடிகள் சிலை

தமிழ்

- தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் நாளையும்
- தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் (1980)
- தமிழ்த்தூது (1952) (தமிழ் இலக்கியக் கழகம்)
- ஒன்றே உலகம் (1966, பாரி நிலையம்)
- திருவள்ளுவர் (1967, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- உலக ஒழுக்கவியலில் திருக்குறள்
- நம் மொழியுரிமைகள் நந்தன் (1961, பதிப்பகம்)

ஆங்கிலம்

- The Carthaginian Clergy (1950)

- Nature in the ancient poetry
- Aspects of Tamil Humanism
- Indian thought and Roman Stoicism
- Educational thoughts in ancient Tamil literature
- Landscape and Poetry a Study of Nature in Classical Tamil Poetry (1997)
- A Reference guide to Tamil studies (1966) (University of Malaya, Kuala Lampur)
- Tamil Studies Abroad (1968, The International Association of Tamil Research)
- Tamil Culture and Civilization: Readings - The Classical Period, Asia Publishing House, London (1970)
- Educational Thought in Ancient Tamil Liteature, Bharathidasan University (2010)

நூல் தொகுப்புகள்

- தனிநாயகம் அடிகளாரின் படைப்புகள் (2013) (பூம்புகார் பதிப்பகம்)
- Complete Works of Thaninayagam Adigalar vol-I (2013)
- Complete Works of Thaninayagam Adigalar Vol-II (2013)

மாநாட்டுத் தொகுப்புகள்

- Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Kulala Lumpur
- International Association of Tamil Research, Proceedings of the Third International Conference Seminar, Paris
- The culture problems of Malyasia in the contact of South - East 1965. The Malayasian Society of Orientalists

ஆய்வேடுகள்

- The Cartheginian Clergy : During the Episcopate of Saint Cyprian. Colombo : Ceylon printers 1947, Doctoral thesis at Ponifical urban Univerisity, Rome: 1939
- "Nature in Ancient Tamil poetry: Concept and intepreation" Tuticorin : Tamil literature society, 1953 Thesis (M.Litt.,)

Annamalai University, Madras 1949. Party Revised and Published under the Title: Nature Poetry in Tamil : The Classical Period: 1963

- Educational Thought in Ancient Tamil Literature. (University of London for the Ph.D., Degree 1957, Published by Bharathithasan University: 2012.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள்

- 1960 Educator Typology in Ancient Tamil Literature, International Congress of Orientalists xxvth, Moscow
- 1965 Ideals and Values Common to South and South East Asian Cultures, Proceedings of the Malaysian Society of Orientalists
- 1966 Chairman's Introductory Remarks, Proceedings of the International Conference Seminary of Tamil Studies, Kula Lumpur, (முதல் தொகுதி 1968)
- 1966 Appereption in Tamil Literary Studies, (இரண்டாம் தொகுதி - 1968)
- 1967 The period of Ethical Literature in Tamil : Third Century to the Seventh Century A.D., Paracidanum - Indian, Iranian and Indo - European studies, The Houge Moutan
- 1968 Tamil Migrations to Guadeloupe and Martinique 1853-1883, Conference Seminar of Tamil Studies, Madras (இரண்டாம் தொகுதி - 1971)
- 1968 Tamil Trade, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், சென்னை
- 1970 The Study of Contemporary Tamil Groups, Conference Seminar of Tamil Studies, Paris Pondicherry
- 1974 Inaugural Address, (நான்காவது மாநாடு - முதல் தொகுதி)
- 1974 ஆரம்ப உரை, (நான்காவது மாநாடு - இரண்டாம் தொகுதி)
- 1981 சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் பண்பு, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், மதுரை.

பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களின் ஆக்கங்கள்

வி. தேவேந்திரன்

https://keetru.com/index.php/2009-10-07-12-27-44/1663-2013-sp-140/25794-2013-12-20-07-09-32

பேராசிரியர் தனிநாயகம் அவர்களின் நூல்கள், இதழ்களில் எழுதிய கட்டுரைகள், மாநாடுகளில் நிகழ்த்திய ஆய்வுரைகள் மற்றும் அவர் நிகழ்த்திய ஆய்வுச் சொற்பொழிவுகள் ஆகியவைகளை கால ஒழுங்கில் தொகுத்துள்ளோம். அவரது முதுநிலை (Master) மற்றும் முனைவர் பட்டத்திற்கு செய்த ஆய்வுகள் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. சில கட்டுரைகளும் தொகுத்து நூலாக்கம் பெற்றுள்ளன. பல்வேறு நாடுகளில் அவர் செய்த பயணம் குறித்த நூல் 'ஒன்றே உலகம். அவரது சொற்பொழிவுகளும் நூல் வடிவம் பெற்றுள்ளன.

பேராசிரியரது கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளவர்கள், கால ஒழுங்கைப் பின்பற்றவில்லை. அவை வெளிவந்த விவரங்கள் குறித்த தகவல்களையும் முறையாகக் கொடுக்கவில்லை. பேராசிரியர் குறித்த ஆய்வில் ஈடுபடுவோருக்கு இத்தன்மைகள் சிக்கல்களை உருவாக்கும். பேராசிரியரின் ஆக்கங்கள் பெரிதும் கட்டுரைகளே ஆகும். இக்கட்டுரைகளைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் தேவையுண்டு.

பேராசிரியரின் ஆக்கங்களைக் கால ஒழுங்கில் அணுகும்போது அவரது படிநிலை மாற்றங்களைக் காண முடிகிறது. தொடக்கத்தில் கிறித்தவ சமயம் சார்ந்து பொதுவான கட்டுரைகளை எழுதியுள்ளார். பின்னர் சமயம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டபோது, பல்வேறு சமயம் சார்ந்த கருத்துநிலைகள் அடிப்படையில் ஆய்வு செய்திருப்பதைக் காணமுடிகிறது. காலப்போக்கில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவனாக சேர்ந்த காலம் முதல் தமிழியல் ஆய்வில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

சங்க இலக்கியம் குறித்த விரிவான புரிதல் உருப்பெற்ற காலத்தில் அதன் அடிப்படைகளை தமது ஆய்வாக தேர்வு செய்து கொண்டார். உலகம் முழுவதும் பயணம் செய்த அநுபவம் சார்ந்து, உலகின் பல நாடுகளிலும் உள்ள தமிழர்கள் குறித்த ஆய்வை மேற்கொண்டார். இவ்வாய்வுகள், உலகத் தமிழ் மாநாட்டு ஆய்வுக் கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டு, மாநாட்டுத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. ஈழத்தமிழரின் உரிமைகள்

தொடர்பாகவும் அவ்வப்போது பல சிறுவெளியீடுகளை பேராசிரியர் எழுதி வெளியிட்டார். பேராசிரியர் மேற்குறித்த பாங்கில் எழுதிய ஆக்கங்களை இப்பகுதியில் தொகுத்துள்ளோம்.

இப்பதிவுகள் முழுமையானது என்று கூறமுடியாது. கால ஒழுங்கு மற்றும் பொருள் ஒழுங்கில் முழுமையான ஆய்வடங்கல் (Annotated Bibliography) ஒன்றைப் பேராசிரியர் ஆக்கங்களுக்கு உருவாக்குவது அவசியம்.

நூல்கள்

1) *1950, The cartheginian clergy, Tamil literature society, Tuticorin*

பேராசிரியர் ரோம் நகரில் தமது குருத்துப் பயிற்சியை மேற் கொண்ட காலத்தில் எழுதிய ஆய்வேடு இந்நூல். இது 1947ஆம் ஆண்டில் முதல் பதிப்பும் 1950இல் இரண்டாம் பதிப்பும் வந்தது. தமிழிலக்கியக் கழகத்தின் வெளியீடாக இரண்டு பதிப்புகளும் கொண்டு வரப்பட்டன.

2) *1952, தமிழ்த்தூது, தமிழ் இலக்கியக் கழகம்*

இந்நூலில் பேராசிரியரின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 1959ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவந்தபோது மேலும் சில கட்டுரைகள் இணைக்கப்பட்டன. 1962ஆம் ஆண்டில் சென்னை பாரி நிலையம் இந்நூலின் நான்காம் பதிப்பை வெளியிட்டுள்ளது.

3) *1961, நம் மொழியுரிமைகள், 3ஆம் பதிப்பு, நந்தன் பதிப்பகம், கண்டி*

தனிச் சிங்களச் சட்டம், 1956இல் சிங்களப் பேரினவாத அரசால் கொண்டு வரப்பட்டபோது அதனை மறுத்து பேராசிரியர் எழுதிய குறு நூல் இதுவாகும்.

4) *1966, A reference guide to Tamil studies, University of Malaya, Kuala Lampur. (தொகுப்பு நூல்)*

இத்தொகுப்பில் 1355 நூல்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. 1960ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் தமிழியல் ஆய்வு உலக அளவில் நடைபெற்றதை அறிய இந்நூல் உதவுகிறது. பல்வேறு நாடுகளிலும் உள்ள 18 அறிஞர்கள், பேராசிரியர்கள் தனிநாயகம் அடிகளுக்கு அனுப்பியக் குறிப்புகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

5) *1966, ஒன்றே உலகம், பாரி நிலையம், சென்னை*

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் உலகம் முழுவதும் மேற்கொண்ட பயண அனுபவத்தை இந்நூலில் வெளிப்படுத்தி யுள்ளார். ஒவ்வொரு நாட்டிலும் வாழும் தமிழர்கள் குறித்த விரிவான குறிப்புகளை பதிவு செய்துள்ளார். 1974ஆம் ஆண்டு இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. தற்போது மூன்றாம் பதிப்பாக 2012இல் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்ப் பேராயம் வெளியிட்டுள்ளது.

6) *1967, திருவள்ளுவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தனிநாயகம் திருக்குறள் குறித்து நிகழ்த்திய சொற்பொழிவை அப்பல்கலைக் கழகம் 'திருவள்ளுவர்' எனும் தலைப்பில் 1967ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

7) *1968, Tamil Studies Abroad, The International Association of Tamil Research (தொகுப்பு நூல்)*

பல்வேறு நாடுகளில் தமிழியல் ஆய்வு குறித்த விரிவான விவரங்களை இந்நூலில் காண முடியும். உலகின் பல நாடுகளில் நடைபெறும் தமிழியல் ஆய்வு பற்றிய விவரங்களை அந்தந்த நாட்டில் உள்ள அறிஞர்கள் தொகுத்து அனுப்பினர். அதனை பேராசிரியர் தனிநாயகம் அடிகள் இத்தொகுப்பு நூலாக உருவாக்கியுள்ளார்.

8) *1970, Tamil culture and civilization : Readings - The Classical Period, Asia Publishing House, London (தொகுப்பு நூல்)*

மலாயா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பணிபுரிந்தபோது மாணவர்களுக்குத் தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் என்ற பாடத்தை நடத்தி வந்தார். மாணவர்களுக்கு உதவும் வகையில் மேற்குறித்த பொருண்மை சார்ந்த பல்வேறு கட்டுரைகளைத் தொகுப்பு நூல் வடிவில் கொடுத்தார். இத்தொகுப்பில் மிகச்சிறந்த அறிஞர்களின் கட்டுரைகள் தெரிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

9) *1980, தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், Research in Tamil studies : Refrospect and Prospect, Thanthai Chelva memorial Trust, Jaffna*

தந்தை செல்வா அறக்கட்டளையின் மூலம் பேராசிரியர் தனிநாயகம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகள் இக்குறு நூலில் இடம் பெற்றுள்ளன.

10) 1997, Landscape and Poetry a Study of Nature in Classical Tamil Poetry

பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை எனும் இந்நூல் எம்.லிட்., பட்டத்திற்கான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு கொடுக்கப் பட்ட ஆய்வேடாகும். 1972இல் 'Nature in ancient Tamil Poetry' எனும் தலைப்பில் தமிழ் இலக்கிய கழகத்தால் வெளியிடப்பட்டது. பின்னர் 1963இல் சிங்கப்பூரில் இந்நூல்'Nature poetry in Tamil :The classical period' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டது. 1966ஆம் ஆண்டு பம்பாய் ஆசிய வெளியீட்டகத்தின் சார்பில் இந்நூல் Landscape and poetry : A study of nature in classicasl tamil poetry எனும் தலைப்பில் வெளியிட்டனர். இந்நூலே உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தால் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

11) 2009, பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, மொழியாக்கம் : ந.மனோகரன், மாற்று, சென்னை.

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் Tamil Culture இதழில் பண்டைத் தமிழ் கல்வி பற்றி எழுதிய நான்கு ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

12) 2010, Educational Thought in Ancient Tamil Liteature, Bharathidasan University, Tiruchirappalli-24

1955-1957ஆம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள் எனும் பொருளில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்தார். அந்த ஆய்வேடு இப்பொழுது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

மாநாட்டுத் தொகுப்புகள்

- Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Kulala Lumpur
- International Association of Tamil Research, Proceedings of the Third International Conference Seminar, Paris

- The culture problems of Malyasia in the contact of South - East 1965. The Malayasian Society of Orientalists

பேராசிரியர் - நூல் தொகுப்புகள்

பேராசிரியர் தனிநாயகம் நூற்றாண்டையட்டி அவருடைய ஆக்கங்கள் பின்வரும் வகையில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

- 2013, தனிநாயகம் அடிகளாரின் படைப்புகள், தனியாக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு, பூம்புகார் பதிப்பகம், சென்னை-108 (முதற் பதிப்பு) இத்தொகுப்பில் ஒன்றே உலகம், திருவள்ளுவர், சங்க காலத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு, தமிழர் பண்பாடும் அதன் சிறப்பில்புகளும், தமிழ்த்தூது ஆகிய நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
- 2013 Complete Works of Thaninayagam Adigalar vol-I, Thani Nayagam Adigalar Centenary Celebrations Committee (First Edition)
- 2013, Complete Works of Thaninayagam Adigalar Vol-II, Ed:Thani nayagam Adigalar Centenary Celebrations Committee, (First Edition)

சொற்பொழிவுகள்

பேராசிரியர் தனிநாயகம் நிகழ்த்திய சொற்பொழிகள் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1959-1960, Aspects of Tamil Humanism

1962 Indiajn Thought and Roman Stoicism, an Inaugural Lecture Delivered on 14th December, University of Malaya, Kuala Lumpur

1967 Tiruvalluvar, Sornammal Endowment Lectures, Annamalai University

1972 The Humanistic Scene

1972 The Humanistic Ideals

1972 Tamil Humanism - The Classical Period

1997 The Tirukkural and the Greek Ethical Thought

1980 Research in Tamil Studies, - Retrospect and Prospect

1980 தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்

இதழ்கள்

Bottled Sunshine

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் கிறித்தவக் குருமாராகப் பணி யாற்றியபோது பல்வேறு கிறித்தவ இதழ்களிலும் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். அவ்வகையான இதழ்களில் ஒன்றே, மேலே காணப்படும் இதழ். இவ்விதழில் தனது இளமைக்காலப் பெயரில் கட்டுரைகளை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து இவ்விதழ் வெளிவந்தது. கட்டுரைகள் அனைத்தும் பொதுவான பொருண்மை களில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

The messenger of the Sacred heart for Ceylon

கொழும்பிலிருந்து வெளிவந்த மேற்குறித்த இதழில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் கீழ்வரும் வகையில் அமைந்துள்ளன. இவ்விதழும் கிறித்தவ சமயச் சார்பிதழே.

- 1933, Oct., The Hound of Heaven
- 1933, Nov., The Hound of Heaven
- 1933, Dec., Sea Shells
- 1934, Jan., A square Mile of Waterfalls
- 1934, Mar., A Peep into Childhood Lane
- 1934, Mar., Lead Kindly Light
- 1934, Apr., Poor thief of Song
- 1934, May, The run-stalers
- 1934, July, A showler of rain
- 1934, Aug., A borrowed Idea
- 1934, Sep., Thomsonian cameos
- 1934, Dec., The path to Rome
- 1935, Apr., The path to Rome
- 1935, May, The path to Rome
- 1941, July, The cricketer’s poet

Tamil Culture

1952 முதல் 1966 வரை இவ்விதழ் வெளிவந்தது. முதல் நான்கு ஆண்டுகள் தூத்துக்குடி கல்விக் கழகத்தின் மூலமே இவ்விதழ் வெளியிடப்பட்டது. பின்னர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலமாக இவ்விதழ் வருவதற்கு மானியம் வழங்கப்பட்டதை அறிகிறோம். 45 இதழ்கள் வெளிவந்துள்ளன. இதில் சுமார் 350 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு அறிஞர்கள் தமிழியல் தொடர்பாக எழுதிய கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

- 1952 Feb., This Quarterly Review, 1:1
- 1952 June, The Survival of Tamil Culture, 1:2
- 1952 Sep., The Ethical Interpretation of Nature in Ancient Tamil Poetry, 1:3&4
- 1953 Render upto Tamil the Things that are Tamil, 2:1
- 1953 The Tamils said it all with Flowers, 2:2
- 1952 Statesmen and Scholarship, 2:3
- 1954 The Teaching of Tamil, 3:1
- 1954 Tamil Manuscripts in European Libraries, 3:3&4
- 1955 The Journal of the Academy, 4:1
- 1955 Tamil Culture Influences in South East Asia, 4:3
- 1955 Tamil Culture - Its past its Present and its Future with Special Reference to Ceylon, 4:4
- 1956 Ancient Tamil Literature and Study of Ancient Indian Education, 5:1
- 1956 The Educator of Early Tamil Society, 5:2
- 1956 Languages Rights in Ceylon, 5:3
- 1957 A Seminal Period of Indian Thought, 6:1
- 1957 A seminar Period of Indian Thought, 6:3
- 1957 Ancient Tamil Poet Educators, 6:4
- 1958 The Philosophic Stage of Development in Sangam Literature, 7:1
- 1958 The First Books Printed in Tamil, 7:3
- 1959 The Tamil Development and Research Council. 8:1
- 1959 The Vocabulary and Content of Tamil Primers and First Readers, 8:3

- 1959 Earliest Jain and Buddhist Teaching in the Tamil, 8:4
- 1961 Dr. R.P.Sethupillai, 9:3
- 1961 A bibliographical guide to Tamil Studies, 9:4
- 1963 Regional Nationalism in Twentieth Century Tamil Literature, 10:1
- 1963 The Novelist of the City of Madras, 10:2
- 1963 Indian Thought and Roman Stoicism, 10:3
- 1963 Nature and the Natural in Kalyanasundaranar, 10:4
- 1964 Antuo de Proenca's Tamil - Poratuguese Dictionary 1679 an Introduction, 11:2
- 1964 Preface to the Tamil - Portuguese Dictionary, 1679, 11:2
- 1966 Apperception in Tamil literary Studies, 12:283

Journal of Tamil Studies

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் தமிழக அரசு உதவியுடன், சென்னையில், உயர் கல்வி ஆய்வு நிறுவனம் ஒன்றை தமிழியல் ஆய்வுக்காக உருவாக்கத் திட்டமிட்டார். இதன் ஒரு பகுதியாக கொண்டு வரப்பட்ட இதழே மேற்குறித்த இதழ். 1969 இதழ் ஒன்று பகுதி இரண்டில் உலகம் தழுவிய தமிழியல் ஆய்வு குறித்த விரிவான ஆவணங்களைப் பதிவு செய்துள்ளார்.

- 1969 Two Decades of Tamil Studies, 1:1
- 1969 International Association of Tamil Research (a) Notes (b) Constitution, 1:1 part II
- 1969 International Conference - Seminar of Tamil Studies (a) Copy of Invitation Sent to Delegates (b) Review of the Conference by Dr.H.F.Owen, 1:1 Part II
- 1969 International Institute of Tamil Studies (a) Notes (b) Detailed Project (c) Second Report Re-phasing of the Programme and the Budget, 1:1 Part II
- 1969 Journal of Tamil studies (a) Announcement (b) Style Sheet for the Guidance of Contributors, 1:1 Part II
- 1969 Register of Scholars for Service in Institutions in India and Abroad, 1:1 Part II

- 1969 News and Notes (a) Pottery will tell the story of man (b) Decipherment of Indus vally script (c) South Asia Centre Kansan Varsity, 1:1 Part II
- 1969 Tamil Emigration to the Martinique, 1:2
- 1972 Tolkappiyam - The Earliest Record, 1

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் வேறு சில இதழ்களிலும் ஒரு சில கட்டுரைகள் எழுதினார். அவ்விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

- 6.11.1953 The Times of Ceylon, Inadequacy of Literature in the Swabasha
- 8.2.1954 The Times of Ceylon, Swabasha, The Indian Experiment
- 16.6.1962 Malayan Times, Religion and Culture
- 1966, July Eastern Horizon, Ancient Tamil Poetry
- 1953, Jan. - Mar., - Liturgical arts, Catholic Religious Art in South India
- 1963, Apr - June, Paedagogica Historia, The Typology of Ancient Indian Education
- 1959, July-Dec., The Ceylon Journal of Historical and Social Studies, The Scope of adult education
- 1959, July-Sep., Journal of the National Education Society of Ceylon, The Vocabulary and Content of Tamil Primers and First Readers
- 1960, Nov., Journal of the National Dducation Society of Ceylon, The Philosophy and Practice of Teacher Education
- 1961, Mar.-Sep., Journal of the National Education Society of Ceylon, Aspects of Secondary Education in Western Europe
- 1959, July, The Ceylon journal of historical and Social studies, The Scope of Adult Education
- 1942-43 The Anthonian, The Poetry of Kayts
- 1949 St. Patrick's Annual, Don Eogenius Pacelli
- 1953 Catholic Christmas annual, The Catholic Contributiojn to Tamil literature

- 1960-61, Annuals of Oriental Research of the University of Madras, Aspects of Tamil Humanism. The Ideals of the Expanding self
- 1975, Religious and Social Issues, Religion and Society
- 1961, Dr.R.P.Sethuppillai Silvar Jubilee Commemoration Volume, The Thirukkural and Greek Ethical Thought
- 1965, Nov., Siam Society Felicitation Volume of South East Asian Studies, Classical Love Poetry in Tamil

சத்தியவேத பாதுகாவலன்

- 1949, சித்திரை 21, பனிரெண்டாம் பத்திநாதர்
- 1951, வைகாசி 03, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு
- 1951, வைகாசி 17, பிறமொழிக் கலப்பால் ஒரு மொழி சிதையவே செய்யும்: தமிழில் உரையாடுகையில் தனித்தமிழ் மொழியைக் கையாள வேண்டும்
- 1951, ஆவணி 9, தமிழ்த் தூது
- 1951, கார்த்திகை 1, தமிழின் வளர்ச்சி
- 1951, கார்த்திகை 22, அர்ச் அருஸ்தீனின் புகழ் உரை நூல்
- 1954, மாசி 18, கீழ்த்திசை நாடுகளில் அச்சுக்கண்ட முதல் நூல்கள் தமிழ் நூல்களே.
- 1952, தமிழ் ஓசை (தொகுதி 2), மலரும் மாலையும்
- 1956, கல்கி தீபாவளி மலர், தமிழ்ச்செல்வங்கள்
- 1958, கல்கி தீபாவளி மலர், முதல் அச்சேறிய தமிழ் நூல்கள்
- 1958-59, இளங்கதிர் (தொகுதி), ஒற்றுமை அமெரிக்கா
- 1960, ஆடி-மார்கழி, சமூக மஞ்சரி, முதிர்ந்தோர் கல்வியின் விரிவு
- 1961, தை-ஆனி, கலைப்பூங்கா, திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்
- 1963, சித்திரை, கல்வி, கல்வியின் நோக்கம்
- 1963, ஜூன், தமிழ் நேசன், மலேசியாவின் தமிழ் எழுத்தாளரும் அவர் பணியும்
- 1971, ஆனி, ஈழ நாடு, தமிழ் மொழியின் வேர் இயல்
- 1980, அக்டோபர், வீரகேசரி, வீரமாமுனிவர் : தமிழாராய்ச்சிக்குப் பங்களிப்பு செய்த ஐரோப்பிய தலைமகன்
- 1963, கலைக்களஞ்சியம், தொகுதி 9, வீரமாமுனிவர் (1680-1747)

- 1966, கல்கியின் வரலாற்று நூல்கள், பதிப்பு : கா.பொ.இரத்தினம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை

மாநாடுகள்

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் மூலமாக (IATR) நடைபெற்ற மாநாட்டுக் கட்டுரைத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் பின்வருமாறு அமை கின்றன. இதில் இரண்டு மாநாட்டுத் தொகுதிகளை இவரே பதிப்பித்தார்.

- 1960 Educator Typology in Ancient Tamil Literature, International Congress of Orientalists xxvth, Moscow
- 1965 Ideals and Values Common to South and South East Asian Cultures, Proceedings of the Malaysian Society of Orientalists
- 1966 Chairman’s Introductory Remarks, Proceedings of the International Conference Seminary of Tamil Studies, Kula Lumpur, (முதல் தொகுதி 1968)
- 1966 Appereption in Tamil Literary Studies, (இரண்டாம் தொகுதி - 1968)
- 1967 The period of Ethical Literature in Tamil : Third Century to the Seventh Century A.D., Paracidanum - Indian, Iranian and Indo - European studies, The Houge Moutan
- 1968 Tamil Migrations to Guadeloupe and Martinique 1853-1883, Conference Seminar of Tamil Studies, Madras (இரண்டாம் தொகுதி - 1971)
- 1968 Tamil Trade, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், சென்னை
- 1970 The Study of Contemporary Tamil Groups, Conference Seminar of Tamil Studies, Paris Pondicherry
- 1974 Inaugural Address, (நான்காவது மாநாடு - முதல் தொகுதி)
- 1974 ஆரம்ப உரை, (நான்காவது மாநாடு - இரண்டாம் தொகுதி)
- 1981 சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் பண்பு, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், மதுரை.

ஆய்வேடுகள்

- The Cartheginian Clergy : During the Episcopate of Saint Cyprian. Colombo : Ceylon printers 1947, pp xviii&112p. Doctoral thesis at Ponifical urban Univerisity, Rome, 1939
- "Nature in Ancient Tamil poetry : Concept and intepreation" Tuticorin : Tamil literature society, 1953 xxii, 185 pp. Thesis (M.Litt.,) Annamalai University, Madras 1949. Party Revised and Published under the Title : Nature Poetry in Tamil : The Classical Period 1963
- Educational Thought in Ancient Tamil Literature. Thesis Submitted to the University of London for the Ph.D., Degree 1957, Published by Bharathithasan University in 2012.

இப்பதிவுகளைத் தொகுத்த வி. தேவேந்திரன்,
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறை
முனைவர் பட்ட ஆய்வாளர்.

தனிநாயகம் அடிகள் தமிழாய்வுக்கு வித்திட்ட தமிழறிஞர்

ந.முருகேச பாண்டியன்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-nov23/46185-2024-01-02-06-55-06

தமிழில் திறனாய்வு என்பது நீண்ட பாரம்பரியமுடையதெனினும், புறநிலையில் ஒரு படைப்பினை நுணுகி ஆராய்தல் நூற்றாண்டுப் பழமையுடையது. இலக்கியப் படைப்புகளை வாசித்து, அவற்றில் பொதிந்துள்ள நுட்பங்களை ரசித்து மகிழ்தலும், மேலைநாட்டுத் திறனாய்வுக் கோட்பாடுகளை வறட்டுத்தனமாகப் பிரயோகித்து விமர்சனமெனச் சிலாகிப்பதும் வழக்காக இருந்த காலத்தில், தனிநாயகம்

அடிகளாரின் விமர்சன அணுகுமுறை தனித்துவமானது. வ.வே.சு. ஐயர், டி.கே.சி. போன்றோரின் விமர்சனம், ரசனையை அடிப்படையாகக் கொண்டிருந்தபோது, அதனைப் பல்வேறு களங்களுக்கு விரித்தவர் தனிநாயகம் அடிகள். அவருடைய விமர்சனப் பார்வை, தொடக்கத்திலேயே புதிய போக்குகளை அறிமுகம் செய்தது. தமிழுடன் ஆங்கிலம், ஸ்பானிஷ், லத்தீன், பிரெஞ்சு, போர்த்துகீஸ் போன்ற பல்வேறு மொழிகளைக் கற்றுத்தேர்ந்த தனிநாயகம் அடிகளின் 'அனைத்துலகப் பார்வை' முழுக்க அறிவியலை அடிப்படையாகக்கொண்டது. ஒப்பிடுதலும் தர மேம்பாட்டினை அறிதலும் அவரது விமர்சனப் பார்வைக்குச் செழுமையூட்டின. தமிழ்மொழி, தமிழிலக்கிய மேன்மை, தமிழரின் பாரம்பரியச் சிறப்பினை உலகமெங்கும் வாழும் பிறமொழி அறிஞர்களிடம் பரப்புதலை வாழ்வின் இலக்காகத் தனிநாயகம் அடிகள் கொண்டிருந்தார். அவருடைய தமிழார்வம், போலிப் பெருமையையும் பண்டிதத்தின் பகட்டினையும் உள்ளடக்கியதன்று. தமிழ்த் திறனாய்வில் சொந்த முயற்சியின் விளைவாகக் கண்டறிந்த உண்மைகளைப் பரப்பிட வாழ்நாள் முழுவதும் இடையறாது உழைத்த தனிநாயகம் அடிகளின் உழைப்பு, ஒப்பீடு அற்றது. நவீனத் தமிழின் பன்முகத்தன்மைகளைப் பற்றி மதிப்பிடும்பொழுது, தனிநாயகம் அடிகளாரைத் தவிர்த்துவிட்டு ஆராய்தல் இயலாதது.

ஈழத்திலுள்ள காவலூர் அருகிலுள்ள கரம்பொன் என்ற சிற்றூரில், ஹென்றி ஸ்ரனிஸ்லாஸ்- சிசில் இராசம்மா வஸ்தியா பிள்ளை தம்பதியரின் முதல் குழந்தையாக 02-08-1913 அன்று தனிநாயகம் அடிகள் பிறந்தார். இவரது இயற்பெயர் சேவியர். அவர் சொந்த ஊரில் தொடக்கக் கல்வியும் யாழ்ப்பாணத்தில் கல்லூரிக் கல்வியும் கொழும்பு நகரில் இறையியல் கல்வியும் பயின்றார். பின்னர் திருவனந்தபுரம் மறை மாவட்டத்தில் சேர்ந்த தனிநாயகம், மேற்படிப்பினுக்காக ரோம் நகருக்குச் சென்றார். The Carthaginian Clergy என்ற தலைப்பில் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றார். அது, 1950இல் நூல் வடிவில் வெளியாகியுள்ளது. இந்தியாவிற்கு திரும்பி வந்தவர் சிறிது காலம் வடக்கன் குளத்தில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சேர்ந்து முதுகலை, இலக்கிய முதுகலை (எம்.லிட்) பட்டங்கள் பெற்றார்.'

நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்' என்பது ஆய்வுத் தலைப்பாகும். அவருடைய வகுப்பறைத் தோழர் வி.அய்.சுப்பிரமணியம்.

ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரேசில், எக்குவதோர், பெரு, மெக்சிகோ, இத்தாலி முதலிய பல நாடுகளுக்குச் சென்று உரை நிகழ்த்திய அடிகளார், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் தமிழின் சிறப்பைப் பற்றி ஒரே ஆண்டில் 200 விரிவுரைகள் ஆற்றினார். அவருடைய ஆய்வுரைகள், ஏற்கெனவே இந்தியாவில் ஆய்வில் ஈடுபட்டிருந்த பல மேலைநாட்டு அறிஞர்களின் கவனத்தைத் தமிழின் பக்கம் திருப்பின. அறிஞர்கள் பலரைத் தமிழாய்வில் ஈடுபட ஊக்குவித்த அடிகளார், பல்வேறு மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை அமைந்திடவும் வழிவகுத்தார். இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையை மாற்றி, உலக அரங்கில் பல நாடுகளிலும் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கே உரியது. இந்திய நாகரிகத்தின் முழுமையையும் இலக்கியச் செழுமையையும் உரிய முறையில் ஆராய்ந்து அறிய வடமொழி அறிவோடு தமிழறிவும் இன்றியமையாதது என்பதை அறிஞர் உலகத்துக்கு அடிகளார் உணர்த்தினார்.

தமிழாய்வுக் கட்டுரைகளைத் தமிழில் மட்டும் படைத்தால் போதாது, அவை ஆங்கிலத்திலும் எழுதப்பட்டால்தான் உலக அரங்கினைச் சென்று அடையமுடியும் என்பதால் தமிழாய்வுக்காக ஆங்கில இதழ் ஒன்று வெளியிடப்படுவது கட்டாயத் தேவை என்பதைத் தம் உலகத் தமிழ்த் தூதுப் பயணத்தின்போது அடிகளார் அறிந்தார். எனவே 1952ஆம் ஆண்டில் 'Tamil Culture' முத்திங்கள் இதழை அடிகளார் வெளியிடத் தொடங்கினார். இது தனியொருவர் மேற்கொண்ட தனிப்பெரும் முயற்சி மட்டுமல்ல, 12 ஆண்டுகளுக்குப் பின்பு உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் தோன்ற வழிவகுத்தது. மேலை நாடுகளைச் சார்ந்த தமிழறிஞர்களாகிய கமில் சுவலபில், ழான் பீலியோசா, எ.ஆந்த்ரனோவ், எம்.பி. எமனோ, ஆர்னோ லேமன், எஃப்.பி.ஜே.கியூப்பர், ஜே.ஆர். மார், எட்கர் நோல்ட்டன், சி.ஆர். பாக்சர், தாமஸ் பர்ரோ போன்றோரும் இந்திய, இலங்கைத் தமிழறிஞர் பலரும் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கிவந்த

ஆய்விதழ், பல மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களின் நூலகங்களில் இடம் பெற்ற சிறப்புக்குரியதாகும்.

1964ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மாநாட்டில் உலகமெங்கிலுமிருந்தும் கலந்துகொண்ட பேராசிரியர்களை ஒருங்கிணைத்து அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் குழு தோற்றுவிப்பதில் அடிகளார் மூலவராக விளங்கினார். அந்த அமைப்பின் பொதுச் செயலர்களாகத் தனிநாயகம் அடிகளும் கமில் சுவலபிலும் பொறுப்பேற்றனர்.

அடிகளார் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1966 ஆம் ஆண்டு மலேயாவில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். இரண்டாம் மூன்றாம் நான்காம் உலகத் தமிழாராய்ச்சி ஏற்பாடுகளிலும் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்.

சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நிறுவப்படுவதற்கான செயலாக்கத்தில் அடிகளாரின் பங்கு கணிசமானது. அந்நிறுவன வெளியீடான Journal of Tamil Studies இதழுக்குச் சிறிதுகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இறுதியில் ஓய்வுபெற்று ஈழத்தில் தங்கியிருந்த அடிகளார் 01-09-1980 அன்று அகாலமானார்.

அடிகளாரின் நூல்கள் அடிகளாரின் முதல் நூல் 'தமிழ்த் தூது' இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு 1952-ஆம் ஆண்டு வெளியானது. அடிகளாரின் உலகப் பயண அனுபவங்கள் 'ஒரே உலகம்' என்ற தலைப்பில் 1963ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றன.

Reference Guide to Tamil Studies (1966)> Nature poetry in Tamil - the clasical period (1963)> Tamil Studies Abroad : A symposium (1968) Tamil Culture as Civilization Readings, The Carthaginian Clergy (1950) ஆகிய நூற்கள் ஆங்கிலத்தில் அடிகளார் எழுதியவையாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் ஆற்றிய சொற்பொழிவானது 'திருவள்ளுவர்' என்ற தலைப்பில் 1967ஆம் ஆண்டு நூல் வடிவில் வெளியாகியுள்ளது.

Tamil Culture என்ற ஆங்கிலக் காலாண்டிதழ் அடிகளாரின் ஆசிரியர் பொறுப்பில் 1952-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது. அவை பன்னிரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன.

அடிகளார் எழுதிய முப்பது ஆய்வுக் கட்டுரைகள் Tamil Culture இதழில் வெளியாகியுள்ளன. அவர் எழுதிய சுமார் 70 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலும் கருத்தரங்க மலர்களிலும் வெளிவந்துள்ளன.

அடிகளார், இலக்கியம், இலக்கணம் என்று தமிழிலக்கியப் பரப்பினுக்குள் சுருங்கியிருந்த ஆய்வுப் போக்கினைத் ‘தமிழாய்வு’ என்ற புதிய தளத்திற்குள் விரிவுபடுத்தினார். பண்பாடு, ஒப்பிலக்கியம், மொழியியல், கல்வி, இறையியல், புவியியல், மெய்யியல், நாட்டுப்புறவியல், கவின் கலைகள், வரலாறு போன்ற பல்வேறு துறைகளுடன் தமிழ் இலக்கிய ஆய்வைத் தொடர்புபடுத்தி ஆராய்ந்திட வழிவகுத்திட்ட அடிகளாரின் செயற்பாடுகள் தனித்துவமானவை. பன்மொழி அறிவுடைய அடிகளார் உலக இலக்கியப் படைப்புகளை மூலமொழிகளிலே வாசிக்கும் வாய்ப்புப் பெற்றவர் ஆதலால், தமிழிலக்கியப் படைப்புகளை ஒப்பிட்டுநிலையில் ஆராய்ந்திடும் ஆற்றல் உடையவராக விளங்கினார். தமிழாய்வுக் கட்டுரைகளை வெளியிட Tamil Culture என்றும் ஆங்கிலக் காலாண்டிதழைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். இதனால் உலகமெங்கும் தமிழாய்வு குறித்து அக்கறையுள்ள அறிஞர்களிடம் அடிகளாருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பண்டைத் தமிழ் இலக்கியச் சிறப்பினையும் தமிழரின் வரலாற்று முக்கியத்துவத்தையும் ஒப்பீட்டு நிலையில் ஆழமாக ஆராய்வது, அவரது அடிப்படையான ஆய்வுப் போக்காகும். 1947ஆம் ஆண்டிற்கு முன்னும் பின்னும் தமிழகத்திலும் உலக நாடுகளிலும் நடைபெற்று வரும் பல்வேறு சமூக, அரசியல், பொருளியல், பண்பாட்டு மாற்றங்களைக் கூர்ந்து அவதானித்த இயல்புடைய அடிகளார், எவ்விதமான அரசியல் இயக்கத்தையும்

சார்ந்தவரோ ஆதரித்தவரோ இல்லை. ஆனால் அவருடைய தமிழ் பற்றிய கோட்பாடுகள், தமிழர் பற்றிய கண்டுபிடிப்புகள் திராவிட இயக்க அரசியல் வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவியுள்ளன. தமிழ் பற்றிய ஆரவாரமும் வெற்று அலங்கார ஜாலங்களும் முதன்மைப்படுத்தப்பட்ட தமிழகச் சூழலில், அறிவியல்ரீதியில் தமிழாய்வை வளப்படுத்தியவர் அடிகளார். 'வாளொடு முன் தோன்றிய முதல் மனிதன் தமிழனே' என்று வீண் பெருமை பேசிக் கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் வரலாற்று ஆதாரங்களையும் மெய்மைகளையும் கொண்டு தமிழாய்வினுக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்த்திட்டார்.

வரலாற்றுப் பார்வையும் ஒப்பியல் அணுகுமுறையும் அடிகளார் நிகழ்த்திய ஆய்வுகளின் அடித்தளமாக விளங்குகின்றன. வரலாற்றுப் பார்வை என்பது சமுதாயத்தின் பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்து நுட்பமாக ஆராய்ந்து, அறிவியலடிப்படையில் கொள்ளத்தக்கனவற்றை ஏற்றுக்கொண்டு, வேண்டாதனவற்றைப் புறந்தள்ளி, காரணகாரிய அறிவுடன் விளக்குவதாகும். கடந்த காலம் பற்றிய விளக்கத்தை அளிப்பதுடன், மாறிவரும் புதிய சமூகத்தின் அம்சங்களையும் கணக்கிலெடுத்துக்கொள்வது இத்தகைய ஆய்வின் சிறப்பாகும். பல்கலைக்கழகங்களில் மும்முறை முனைவர் பட்ட ஆய்வேடுகள் அளித்துள்ள அடிகளார், ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரையினையும் அடிப்படையான தரவுகளைக்கொண்டு, தருக்கரீதியில் விவாதித்துப் புதிய முடிவுகளுடன் எழுதியுள்ளார். அவரது கட்டுரையாக்க முறையானது ஆய்வியல் நெறியினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தமிழ் பற்றிய அடிகளாரின் கருத்துகள்

பொதுவாகத் தமிழகத்தைவிட ஈழத்தில் தமிழ் பற்றிய வரலாற்றுப் பிரக்ஞை கூடுதலாக உண்டு. சைவத்தின் சிறப்புகளை விளக்கிய ஆறுமுக நாவலர், தமிழின் மேன்மைகள் குறித்தும் விளக்கியுள்ளார். யாழ்நூல் எழுதிய விபுலானந்த அடிகள், கனகசபைப் பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை, ஆனந்த குமாரசாமி போன்றோர் தமிழரின் பாரம்பரியச் சிறப்புகளை வரலாற்றுரீதியில் விளக்கியுள்ளனர். சிங்களவருடன் சேர்ந்து வாழவேண்டிய நெருக்கடியான சூழலில், 'தமிழ்' என்ற அடையாளத்தைப் பேணவேண்டிய சூழல் ஈழத் தமிழருக்கு எப்பொழுதும் உண்டு. இத்தகைய

பின்புலத்தில் அடிகளாரின் ‘தமிழ்’ பற்றிய தேடல் உருவாகியிருக்க வாய்ப்புண்டு. பண்டைத் தமிழ் இலக்கியத்தின் மேன்மைகளை அசலாகக் கண்டறிந்த அடிகளார், சங்க காலத் தமிழரின் வாழ்வியல் முறைகளை நுணுகி ஆராய்ந்து மீட்டுருவாக்கம் செய்கின்ற தன்மையினையும் அறிய முடிகின்றது.

கிறிஸ்தவ சமயத் துறவியான தனிநாயகம் அடிகள், சமய நெறிக்கெனத் தன்னை ஒப்புக் கொடுத்தவரெனினும், தமிழ்ப் பற்று மிக்கவர். பன்மொழிப் புலவரான அடிகளார், தமிழ் மொழியின் சிறப்பினையும், அது உலக அளவில் பெறவேண்டிய அங்கீகாரம் குறித்தும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட்டார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா என்றால் சமஸ்கிருதமும், வைதிக சநாதன சமய நெறிகளும் மட்டுமே என்ற கருத்து உலகமெங்கும் நிலவியது. “மேலை நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில், தமிழிலக்கியத்தைப் பற்றிய கருத்துச் சிறிதேனும் இல்லை ஒரு சொல்லேனும் இல்லை” என்று வேதனைப்படும் அடிகளார், இந்திய இலக்கிய வரலாற்று நூல்களிலும் தமிழுக்குரிய இடம் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிடுவது கவனத்திற்குரியது. இந்நிலை மாறிட வேண்டுமென விரும்பிய அடிகளார், அதற்கான அடிப்படைச் செயற்பாடுகளை அவருடைய வாழ்நாள் முழுவதும் இடைவிடாமல் செய்துள்ளார்.

“உலக இலக்கியத் திரட்டு (World Classics) என்னும் பெருந்தொகை நூல்களில், நம் இலக்கிய நூல்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும்" என்ற அடிகளாரின் ஆர்வத்தில் தமிழை அனைத்துலக இலக்கியப் பரப்பினுக்கு உயர்த்தும் முயற்சி பொதிந்துள்ளது. தமிழ் இலக்கியப் படைப்புகளை நுணுகி ஆராய்ந்திடும் திறனாய்வாளரான அடிகளார், “தமிழில் எல்லாச் சமயத்தினரும் உரிமை பாராட்டக்கூடிய இலக்கியப் படைப்புகள் உள்ளன” என்று குறிப்பிடுகின்றார். மேலும் அவர் பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பாடல்களின் சாரத்தினை நுட்பமாக அணுகி, தமிழை இரக்கத்தின் மொழி, பக்தியின் மொழி” என்று முடிவெடுக்கின்றார்.

உலகமெங்கும் பல நாடுகளில் தமிழ் மொழி பேசப்படுவதால், தமிழுக்கெனப் பொது ஒலிப்புமுறை என்ற கருத்தினையும் அடிகளார் முன்வைக்கின்றார். இது அவருடைய மொழியியல் அணுகுமுறையின் வெளிப்பாடாகும்.

தமிழ் உலகமொழியாவதற்கான தகுதியுள்ளது எனவும் தமிழின் தனித்தன்மைகளையும் வளங்களையும் உலகமெங்கும் ஆங்கிலம் வாயிலாகப் பரப்ப வேண்டுமெனவும் குறிப்பிடுகின்ற அடிகளாரின் பார்வை முழுக்க அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. 1934-39ஆம் ஆண்டுகளில் ரோம் நகரில் கிறிஸ்தவ இறையியல் கல்வி பயின்றபோது அவர் பெற்ற பரந்த உலகியல் தொடர்பும், பின்னர் அவர் கற்ற உலக மொழிகளும் தமிழ் பற்றிய அவருடைய கருத்தியலை வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளன.

தமிழ் பற்றிய அடிகளின் கருத்துப் பன்முகத்தன்மையுடையது. “நம் எண்ணங்களை வெளிப்படுத்தும்பொழுது, பிறமொழிக் கலப்பின்றி வெளிப்படுத்த முயலுவோமாகில், நம் மொழி வளம் பெறுவதற்கும், நம் இலக்கியம் உயர்வதற்கும் வழிகாட்டுவோம்". பிறமொழிக் கலப்பின்றித் தமிழைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்குடைய அடிகளார், மொழித்தூய்மை என்ற பெயரில் நடைபெறும் வறட்டுத்தனமான செயல்களையும் கண்டிக்கின்றார். “செந்தமிழ் இயக்கத்தை விரும்பிப் பழைய இலக்கியத்தில் வரும் வடசொற்களின் இடத்தில் தமிழ்ச் சொற்களைப் பெய்து பதிப்பிக்கும் முறைகேடு ஒன்று, அண்மையில் தோன்றியுள்ளது. சிறப்பாக மாயூரம் மாவட்ட நீதிபதி வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் போன்ற நூல்கள், இக்கொடிய மருத்துவச் செயலுக்கு இலக்காயின". அடிகளாரின் பார்வையில் சமூக விமர்சனம் பொதிந்துள்ளது. சமூக மொழியின் அழகே அதன் கொச்சை வடிவமாகும். வாழ்க்கையின் பல்வேறு விசித்திரங்களும் நூதனங்களும் பதிவாகிவிடும் மொழியின் வழியே படைப்பாளியின் உச்சபட்ச சாதனை வெளிப்படுகின்றது. இயந்திர ரீதியிலான மொழித் தூய்மையானது வறட்டுத்தனமானது; மொழியின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாகும்.

தமிழரின் தொன்மை அடையாளங்கள்

அடிகளாரின் 'ஒன்றே உலகம்' புத்தகம் அவர் உலகமெங்கும் பயணித்த அனுபவங்களைப் பதிவாக்கியுள்ளது. 1930கள் தொடங்கிச் சில பத்தாண்டுகளாகப் பல்வேறு நாடுகளுக்குச் சென்ற அடிகளாரின் கவனம், அந்த நாடுகளுக்கும் தமிழ்/ தமிழ்நாட்டுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிவதில் முனைந்திருந்தது. அவர் தந்துள்ள தகவல்கள் தமிழாய்வில் தனித்துவத்தை வலியுறுத்துகின்றன. எங்கே சென்றாலும் அவர் விவரித்துள்ள கட்டுரைகளில் தமிழ்மீது கொண்டிருந்த அக்கறையும் ஈடுபாடும் வெளிப்பட்டுள்ளன. தமிழரின் தொன்மையான அடையாளங்கள் சிந்து சமவெளி நாகரிகம் பரவியிருந்த இடத்தில் இன்றும் எச்சமுடன் காணப்படுவதை அடிகளார் விளக்குகின்றார். மேலும் ஜப்பான் மொழிக்கும் தமிழுக்குமிடையில் சில அம்சங்களில் ஒற்றுமை நிலவுவதையும், நுணுக்கமாகச் சுட்டுகின்றார். ஹவாய் தீவுகளில் மலர்களையும் மாலைகளையும் பெரிதாகப் போற்றுவதைக் கண்டபோது அடிகளுக்குச் சங்க இலக்கியக் காட்சிகள் நினைவில் தோன்றுகின்றன. கீழ்த்திசை நாடுகளில் புத்த சமயத்தைப் பரப்புவதற்கும் வணிகத்தைப் பெருக்குவதற்கும் பண்டைக் காலந்தொட்டே தமிழர்கள் தொடர்புகொண்டிருந்தனர். தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை பாடப்படுவதைக் கண்டறிந்து உலகிற்கு அறிவித்தவர் அடிகளே ஆவார். தாய்லாந்து மொழியிலுள்ள சொற்கள், அங்குள்ள பழமையான கோபுரங்கள், ஓவியங்கள் போன்றன தமிழகத்திற்கும் தாய்லாந்து நாட்டிற்கும் இடையிலான நெருங்கிய உறவினை எடுத்துரைக்கின்றன. இந்தோனேஷியா, வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளில் இன்றளவும் காணப்படும் தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்களை விளக்குவதன்மூலம், தமிழ் அனைத்துலக மொழியாகப் பரிணமிப்பதின் தேவையை அடிகள் விளக்கியுள்ளார். இந்தோனேஷியா மொழியில் வழங்கும் சில சொற்கள் முன்னர் தமிழ்நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை நினைவூட்டுகின்றன என்று குறிப்பிடும் அடிகளார், தந்துள்ள சான்றுகள்: சுக்கு, இஞ்சி, கலம், கடலி, வட்டில், வாடை, கஞ்சி, கொத்துமல்லி, குதிரை, கூடை, பெட்டி, பிட்டு, கொடி(தாலி), கபல்(கப்பல்), அம்மா, அக்கா, மாமா, தம்பி.

பிஜித் தீவு, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் குடியேறியிருப்பதன் மூலம் தமிழரின் வரலாறு விரிகின்றது. இத்தகைய

குடியேற்றச் சூழலை ஆராய்வதன் மூலம் தமிழர் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவியலும் என்று அடிகளார் கருதுகின்றார்.

அடிகளார் ஆசிரியராக இருந்து வெளியிட்ட Journal of Tamil Studies இதழில் வெளியான 'இருபதாண்டு காலத் தமிழ் ஆய்வுகள்' கட்டுரை பன்முகத்தன்மையுடன் அரிய தகவல்களின் தொகுப்பாக உள்ளது. கடந்த இருபதாண்டுகளில் உலகமெங்கும் பல்வேறு பல்கலைக் கழகங்கள், ஆய்வு மையங்கள், அறிஞர்கள் தமிழாய்வில் கவனம் செலுத்தி வருவதனைத் தக்க சான்றுகளுடன் கட்டுரையில் அடிகளார் விளக்கியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் இடம்பெற்றிருந்த அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளுக்கு மட்டும் முன்னுரிமை தரப்பட்டது. இந்நிலையானது 1965ஆம் ஆண்டு மாற்றமடைந்துள்ளது. பதினெட்டுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது என்பதை விளக்கிடும் வகையில் அட்டவணை தரப்பட்டுள்ளது. இலண்டன், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், லைடன், சார்லஸ், உப்சிலா பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்சமயம் ஹைடல்பெர்க், போன், ஸ்டாக் ஹோம், மலேயாப் பல்கலைக்கழகங்களிலும் தமிழுக்குரிய இடம் தரப்பட்டுள்ளது. தமிழ்நாடு தவிர்த்த பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழாய்வுகள் நடைபெற்று வருவது பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மேலைநாட்டு அறிஞர்களான பர்ரோ,எமனோ, கமில் சுவலபில் போன்றோர் தமிழாய்வில் தற்சமயம் ஈடுபட்டிருப்பது, தமிழ் மொழிக்கு உலக அளவில் கிடைத்துள்ள அங்கீகாரத்தின் வெளிப்பாடு என்பது அடிகளாரின் கருத்து.

தமிழ்ச் சமூகவியல் உலகச் சமூகவியலுக்கும் தமிழ் இலக்கியம் உலக இலக்கியத்துக்கும் தமிழ் இசை உலக இசைக்கும் தமிழ் மனிதநேயம் உலக மனித நேயத்துக்கும் வளம் சேர்த்திட, உலகப் பல்கலைக்கழகங்களில் தனக்குரிய இடத்தைத் தமிழ் பெற வேண்டுமாயின் தமிழகத்தில் விரிவான அளவில் பல்துறைகளையும் ஒருங்கிணைத்துத் தமிழாய்வுகள் மேறகொள்ளப்பட வேண்டுமென அடிகளார் வலியுறுத்துகின்றார்.

தமிழரை உலக மனிதராக மாற்றுவதற்கான தொலைநோக்குத் திட்டம் அடிகளாரின் கருத்தில் பொதிந்துள்ளது.

தமிழிலக்கியப் பார்வை

தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூல்களைத் தமிழின் முக்கியமானவையாக அடிகளார் கருதுகின்றார். பக்தி இலக்கியப் படைப்புகளின் 'இரங்குதலைப்' பற்றிக் குறிப்பிடுகையில் உலகில் வேறு எம்மொழி இலக்கியத்திற்கும் இத்தகைய சிறப்பில்லை என்று கூறுகின்றார்.

'நில அமைப்பும் தமிழ்க் கவிதைகளும்: செவ்வியல் காலகட்டம் என்ற அடிகளாரின் ஆய்வேட்டில் பண்டைத் தமிழருக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்புகள் நுணுக்கமாக விளக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு நிலவெளி காடு, மலை, வயல், கடற்கரை ஆகிய நிலப்பரப்பினைக் கொண்டிருந்த தன்மையையும், கோடையில் பாலைபோல மாறிடும் நிலத்தின் இயல்பைக் கருதிப் பாலை என்ற நிலப்பரப்பினையும் ஆக ஐந்து வகை நிலங்களைக் கொண்டிருந்ததை முக்கிய அம்சமாக அடிகளார் எடுத்துரைக்கின்றார். ஐவகை நிலங்களுக்குரிய ஐவகை ஒழுக்கங்களையும் வகுத்து முதல், கரு, உரிப்பொருள்களையும் கண்டறிந்து மனிதனை இயற்கையின் பகுதியாகக் கருதிடும் சங்கக் கவிதைகள் சித்திரிக்கும் உலகு, தமிழுக்கே உரிய கொடையாகும். இலை, தழையிலான ஆடைகளையும் மலர்களையும் மாலைகளையும் அணிந்துகொண்டு வீரம், கொடை, மானத்தினைப் போற்றிய தமிழரின் சமூக வாழ்க்கை பரந்துபட்டது. தமிழர் சமயமானது இயற்கை பற்றிய கருத்தியலுடன் தொடர்புடையது. மரவழிபாடு, பாம்பு வழிபாடு, குன்று வழிபாடு போன்றன முழுக்க இயற்கையுடன் தொடர்புடையன. சங்க மரபு மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்புகள் அடிப்படையிலானது. நம்பிக்கைகள், பொது அறிவு, ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் போன்றன இயற்கையை மையமிட்டுச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பழந்தமிழர் வாழ்வில் பிரிக்கவியலாத அம்சம் 'இயற்கை' என்பது அடிகளாரின் ஆழமான நம்பிக்கை.

சங்ககாலத் தமிழ்ப் பாடல்களின் தனித்தன்மையையும் மேன்மையையும் சமஸ்கிருதம், லத்தீன், கிரீக் இலக்கியப் படைப்புக்களுடன் ஒப்பிட்டு நிறுவியுள்ள அடிகளின் பார்வை, ஒப்பியல் அடிப்படையிலானது. தமிழ் இயற்கைப் பாடல்கள் இயற்கையிறந்த அம்சங்களுடன் மேலோட்டமான தொடர்புடையன. சம்ஸ்கிருத, கிரேக்க, லத்தீன் படைப்புகள் இறையியலுடன் நெருங்கிய தொடர்புடையன என்ற துல்லியமான வரையறை, அடிகளாரின் ஆய்வுத் திறனுக்குச் சான்றாகும்.

பண்டை இலக்கியப் படைப்புகளை நவீனப் போக்குகளின் அடிப்படையில் ஆராய்தலும் அடிகளாருக்கு ஏற்படையதாகும். பழந்தமிழ் இலக்கியத்தில் கல்வி பற்றி விளக்கும்போது, குறிஞ்சி நிலத்தில் அகவன் மகள் மூலம் கல்வி பரவியது என்கிறார். மனிதனுக்குச் சவாலாக விளங்கிய இயற்கையின். ஆற்றலைக் கண்டு அஞ்சியவரின் அச்சத்தைப் போக்கிடவும் மந்திரமோதி நோய் தீர்த்திடவும், எதிர்காலம் உரைத்திடவும், வளம் பெற வழியுரைத்திடவும் விளங்கிய அகவன் மகளின் பணி, கல்விச் சிந்தனைக்கு வித்திட்டது என்பது அடிகளாரின் கருத்து. பின்னர்ப் பாணர்கள் மூலம் வாய்மொழி இலக்கியம் பரவத் தொடங்கியது. பாணர்கள், இசை, நாட்டியம், புகழ்ச்சிப் பண் மூலம் சமூக இயக்கத்தில் கலந்திருந்தனர். இனக்குழு மக்களின் கடந்தகால வீரச்செயல்களையும் நிகழ்கால விருப்பங்களையும் வெளியிடும் குரலாகப் பாணர் விளங்கினர்.

குறுநில மன்னர்களின் ஆதிக்கம் சமூகத்தில் வலுப்பெற்றபோது, 'புலவர்' பரம்பரையினர் மூலம் கல்வியானது மக்களிடையே பரவியது என்று அடிகள் புதிய விளக்கம் தருகின்றார், அடிகளார். புலவர்கள் மரபுசார் நிலையிலும் மரபுசாரா நிலையிலும் கல்விப் பணியாற்றியுள்ளனர். இன்னொருநிலையில் சமுதாயத்தின் சட்டகங்களை வடிவமைக்கின்றவர்களாகவும் அறத்தினை வலியுறுத்துகின்றவர்களாகவும் புலவர்களின் செயற்பாடுகள் விளங்கின. மன்னர்களுக்கும் புலவர்களுக்குமிடையில் நிலவிய உறவு, அன்றைய சமூகத்தில் கல்விக்கு இருந்த செல்வாக்கின் வெளிப்பாடுதான். மனிதனை முழுமையாக்குவதும் உலகத்தாரால் அவன் ஏற்றுக்கொள்ளப்படுவதும் கல்வியினால் சாத்தியமென்று புறநானூற்றுப் பாடல்மூலம் தமிழரின் கல்வியியல் சிந்தனைகளை வடிவமைத்துள்ளார் அடிகள். பண்டைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் கல்வி, கல்வியியலாளர் பற்றி அறிவியல் அடிப்படையில்

நுணுகி ஆராய்ந்திடும் அடிகளாரின் முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழர் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்துள்ளது.

அடிகளின் ஆய்வுக் கட்டுரைகள்

ஆய்வின் அண்மைக் காலத்திய போக்குகளை வெளிப்படுத்தும் வகையில் ஆய்வுக் கட்டுரைகள் விளங்குகின்றன. சர்வதேசரீதியில் தமிழாய்வு குறித்து ஆங்கிலத்தில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகளை அடிகளார் எழுதியுள்ளார். அவை நுண்மாண் நுழைபுலம் மிக்கனவாக அழுத்தமான கருத்துகளைப் புதிய தடத்தில் வெளிப்படுத்துகின்றன. அவரது சில ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புகள் பின்வருமாறு: தமிழ்க் கையெழுத்துச் சுவடிகள், தெற்காசியாவில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம், பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் கல்வியாளர்கள், சங்க இலக்கியத்தில் மெய்யியல் வளர்ச்சி, தமிழில் அச்சேறிய முதல் நூல், தமிழகத்தில் பண்டைய ஜைன, புத்த போதனைகள், தமிழ் மனிதநேயம், தமிழ் கிரேக்க அறக்கொள்கைகள்: ஒப்பாய்வு, செவ்வியல் காலகட்டத்தில் தமிழக - ரோம் வணிகம், தமிழ் இலக்கியத்தில் கத்தோலிக்க சமயத்தின் பங்களிப்பு, தென் இந்தியாவில் சமயக் கலை, சென்னை நகரத்து நாவலாசிரியர், திரு.வி.க.வின் இயற்கையும் இயற்கையியலும், மாட்னிக்குத் தமிழர் பயணங்கள், இருபது ஆண்டுகளில் தமிழாய்வுகள், தொல்காப்பியம் தொன்மையான ஆவணம்... தமிழரின் மரபினையும் விழுமியங்களையும் உலக அளவில் அறிஞர்களிடையே பரப்பிட அடிகளார் செய்திட்ட முயற்சிகளை ஆய்வுக் கட்டுரைத் தலைப்புகள்மூலம் அறிய முடிகின்றது. இவருடைய கட்டுரைகளின் போக்குகள் பொருத்தமான ஆதாரங்கள், தரவுகளின் அடிப்படையில் காரணகாரியத்துடன் விவாதத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

அடிகளார் எழுதிய 'தொல்காப்பியம்: தொன்மையான ஆவணம்' என்னும் ஆய்வுக் கட்டுரை, இலக்கண ஆய்வில் அழுத்தமான கருத்துகளை முன்வைத்துள்ளது. உலக மொழிகளில் வெளியான சிறப்பான நூல்களைப் படித்தறிந்தும், எழில்மிக்க உலக வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்துமுள்ள அடிகளார், தொல்காப்பியத்தைக் கைகளில் ஏந்தி விவரிக்கும்போது ஏற்படும் கிளர்ச்சி வேறு எந்த நூலாலும் ஏற்படுவதில்லை என்று அடிகளார் வாக்குமூலம் தந்துள்ளார். பொதுவாக

அடிகளார் தன்னை மறந்து உணர்ச்சி வயப்படுதலோ வெற்று ஆரவாரச் சொற்களைச் சொல்லுவதோ கிடையாது. ஆனால் தொல்காப்பியத்தின் சிறப்பு அம்சங்கள், அவருக்குள் விளைவித்துள்ள தாக்கத்தினால், அதன் சிறப்புகளை நுணுக்கமாக எடுத்துரைக்கின்றார்.

இனக்குழு மக்களிடையே இன்றும் வழக்கிலுள்ளதைப் போலத் திருமணத்திற்கு முன்னரே காதலர்கள் உறவு கொள்ளுதல் சங்க காலத்தில் நிலவியது என்பதனை அடிகளார் ஏற்றுக் கொள்கின்றார். ஐந்திணைப் பாகுபாடே தொடக்ககாலத்தில் வழக்கிலிருந்தது என்பதும் பின்னர்க் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு திணைகளும் சேர்க்கப்பட்டன என்பதும் அடிகளாரின் கருத்து. தொல்காப்பியம் நூலில் செய்யுளியல் அதிகாரத்தில் செய்யுள் இயற்றுவது குறித்து விளக்கப்பட்டுள்ள நுட்பமான கருத்துக்கள், புலவர்களின் கற்பனைத் திறனை வரையறுப்பவை என்று அடிகளார் முடிவெடுக்கின்றார். தொல்காப்பியம் இலக்கண நூலாக மட்டுமின்றி, பண்டைத் தமிழகத்தின் நிலப்பரப்பு, மரங்கள், உயிரினங்கள், தட்பவெட்பநிலை எனச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய அம்சங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் பதிவாக்கியுள்ளது முக்கியமானதாகும். மேலும் திணைக்கேற்ப மக்களிடையே பிரிவுகள் தொழில்கள், உணவு தேடல், சமூக வாழ்க்கை பற்றிய தொல்காப்பியரின் சித்திரிப்புகள், தமிழரின் இருப்புப் பற்றிய பதிவுகளுக்குச் சான்றாக விளங்குகின்றன. தொல்காப்பியம் வடமொழிச் சார்பு இல்லாமல் தமிழ்மொழி தனித்தியங்கும் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார் அடிகளார்.

தனிநாயகம் அடிகள் தன் சொந்த வாழ்க்கையில் பூக்களைப் போற்றி நேசித்தவர். சங்க காலத் தமிழரின் வாழ்க்கையானது முழுக்கப் பூக்களுடன் தொடர்புடையது என்பதைத் 'தமிழர் வாழ்வில் இயற்கையுடன் பூக்கள்' என்ற கட்டுரையில் பதிவாக்கியுள்ளார். இணைந்து வாழும் தமிழர் இயற்கைச் சூழலைப் போற்றினர். குழந்தை முதல் தடவையாகத் தந்தையைக் காணும்போது, அவர் கழுத்தில் போருக்குரிய பூ மாலை அணிந்திருந்த காட்சி, குழந்தையின் முன் உச்சிக் குடுமியில் பூக்களைச் சூடுதல், குழந்தைகள் பூக்களால் ஆன பொம்மைகளை வைத்து விளையாடுதல், பூக்களாலும் இலைகளாலும் செய்யப்பட்ட ஆடைகளை

உடுத்திக் கொள்ளுதல்... தமிழரின் வாழ்வு முழுக்கப் பூக்களுடன் தொடர்புடையது என்று நிறுவுகின்றார், அடிகளார். வேங்கை மரம் பற்றிய தமிழரின் நம்பிக்கைகள் முக்கியமானவை. வேங்கை மரத்தைப் பார்த்து வேங்கை அல்லது புலி என்று குரலெழுப்பினால், அம்மரம் கிளையைத் தாழ்த்தும் என்பது மக்களிடையே நம்பிக்கை. மணமக்கள் வேங்கை மலர்களால் தங்களை அலங்கரித்துக்கொள்வர். களவுக்காலத்தில் வேங்கை மலர்களையே காதலர்கள் ஒருவருக் கொருவர் கையுறையாகக் கொடுக்க விரும்பினர். திருமணச் சடங்கில் பூக்கள் பயன்பட்டன. காதலில் தோல்வியுற்ற தலைவன் எருக்க மாலையணிந்து மடலேறினான். கிராமங்கள் வழியே பயணம் செய்யும் மக்களுக்கு மலர்கள் வழங்கப்பட்டன. அரசர்களின் அடையாளங்களைக் குறிக்கப் பூக்கள் பயன்பட்டன. போர்க்களம் செல்லும் தமிழர்களும் பூக்களை அணிந்திருந்தனர். இயற்கையின் கொடையான பூக்களைத் தமிழர்கள், நடைமுறை வாழ்க்கையின் அங்கமாகக் கருதினர். தமிழருக்கும் பூக்களுக்குமான உறவினை விளக்கியுள்ள அடிகளாரின் கட்டுரை, பன்முகத்தன்மையுடையது.

தமிழ் ஆவணங்கள் தேடல் இலக்கியப் படைப்புகளை ஆராய்வதுடன், ஆய்விற்கான மூலங்களை அடிப்படைக் கண்டறிதலும் தேவையாகும். உலகமெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அடிகளார் மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்/தமிழர் பற்றிப் பல்வேறு உரைகள் ஆற்றியுள்ளார். அப்பொழுது தமிழில் அச்சு வடிவில் வெளியான பழமையான ஆவணங்களைத் தேடினார். காரணமாக அச்சடிக்கப்பட்ட தமிழ் ஆவணங்கள் பற்றிய புதிய அவருடைய அரிய முயற்சியின் தகவல்கள் வெளிவந்தன. போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரிலுள்ள லிஸ்பன் தேசிய நூலகம், பெலம் நகரிலுள்ள இனவியல் அருங்காட்சியகம், பாரீஸ் நகரிலுள்ள தேசிய நூலகம், ரோம் நகரிலுள்ள மறை பரப்புப் பணி பேராய நூலகம், அமெரிக்கப் பல்கலைக்கழக நூலகங்கள் போன்றவற்றுக்குச் சென்று தமிழில் வெளியான தொன்மையான நூல்களைத் தேடியலைந்தார், அடிகளார். அவரின் கடும் முயற்சி காரணமாகக் கண்டறியப்பட்ட சில நூற்களின் விவரங்கள் பின் வருமாறு:

1. 1550 ஆம் ஆண்டு என்ரீக்கோ என்றீக்கல் அடிகள் எழுதிய தமிழ்மொழி இலக்கண நூலின் 160 பக்க கையெழுத்துப்படி லிஸ்பன் தேசிய நூலகத்திலிலுள்ளது.

2. தமிழ்ச் சொற்களை ரோமன் எழுத்துக்களில் பெயர்தெழுதியதுடன், போர்த்துக்கீசிய மொழிபெயர்ப்புடன் கூடிய 'கார்த்தில்லியா" என்ற நூல் 1554-ஆம் ஆண்டு வெளியாகியுள்ளது. இந்நூல் பெலம் நகரிலுள்ள இனவியல் அருங்காட்சியகத்தில் உள்ளது.

3. அந்தாம் நெப்ரேயென்சா (1625-1666) என்றும் கிறிஸ்தவச் சமயத் துறவி இயற்றிய தமிழ்-போர்த்துக்கீசிய அகராதியின் கையெழுத்துப்படி பாரீஸ் தேசிய நூலகத்திலுள்ளது. இது கேரளாவிலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரில் 1679 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்துள்ளது. அச்சுப் பிரதி வத்திகான் நூலகத்திலுள்ளது.

4. என்ரீக்கோ என்றீக்கல் அடிகளும் புனித இராயப்பர் மனுவேல் அடிகளும் இணைந்து மொழிபெயர்த்த 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூல் கேரளத்திலுள்ள கொல்லத்தில் 1574ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டு வெளியானது. இந்நூலின் பிரதி அமெரிக்காவிலுள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழக நூலகத்திலுள்ளது.

5. கிரிசித்தியாணி வணக்கம் என்ற மொழிபெயர்ப்பு நூலினை 1579-ஆம் ஆண்டு என்ரீக்கோ என்றீக்கல் கொச்சியிலிருந்து வெளியிட்டார். இந்நூலின் பிரதி பிரான்ஸ் நாட்டிலுள்ள செர்போன் பல்கலைக் கழக நூலகத்திலிருந்தது. பின்னர் அது காணாமல் போய்விட்டது. எனினும் அப்பிரதியின் ஒளிப்பட நகல் அமெரிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழக நூலகத்திலுள்ளது.

அச்சியந்திரம் மூலம் பல பிரதிகள் அச்சடிக்கப்பட்டுத் தமிழ் ஆவணங்கள் வெளியான பின்னரும் அவை பாதுகாக்கப்படாத நிலையே தமிழகத்திலிருந்தது. மேலைநாட்டு நூலகங்களில் காத்து வைக்கப்பட்டுள்ள இத்தகைய ஆவணங்களைப் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்ந்ததில், அடிகளாரின் பணியானது, உ.வே.சா.வின் இலக்கியச் சுவடிகள் தேடுதல் பணிபோன்று மதிப்பு மிக்கது. தமிழ் ஊடகங்களின் வரலாற்றில் அச்சுக்

கலைத் தோற்றம், கிறிஸ்தவ இறையியல் பரப்புதல், மொழிபெயர்ப்பு முயற்சிகள் போன்ற ஆய்வுகளில் அடிகளார் கண்டறிந்த நூற்கள் பற்றிய தகவல்கள் என்றும் மூலங்களாக விளங்கும்.

பார்வை நூல்கள்

அடிகள் தமிழாய்வில் முனைந்திருந்தபோதும், முதன்மை ஆதாரங்களைப் பற்றிய தகவல்களைத் தீவிரமாகத் தொகுப்பதிலும் அக்கறைகொண்டிருந்தார். தமிழ்/தமிழர் பற்றி ஐரோப்பிய மொழிகளில் வெளியாகியுள்ள நூல்களைத் தொகுப்பதன்மூலம் சர்வதேசரீதியில் தமிழ் மொழியைக் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றார் அடிகளார். A Reference Guide to Tamil Studies தொகுப்பு நூல் 1966ஆம் ஆண்டு மலேயாவில் அடிகளாரால் வெளியிடப்பட்டது 122 பக்கங்களைக் கொண்ட இப்பார்வை நூலில் 1335 நூற்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலத்தீன், பிரெஞ்சு, ஜெர்மனி, செக், மலாய், ரஷ்யன், ஸ்வீடிஷ், இத்தாலி, போர்த்துக்கீசு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் தமிழியல் பற்றி வெளியான நூற்கள் பற்றிய தகவல்களின் தொகுப்பாக நூல் விளங்குகின்றது. தமிழோடு தொடர்புடைய பிறதுறை நூற்கள் பற்றிய தகவல்களும் நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழாய்வில் ஈடுபட முனைந்திடும் வெளிநாட்டவருக்குப் பார்வை நூலாக அடிகள் தொகுத்த நூல் என்றும் விளங்கும் என்பது உறுதி.

Tamil Studies abroad என்ற நூலானது 1968-ஆம் ஆண்டு அடிகளால் வெளியிடப்பட்டது. இந்தியாவில் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் நடைபெற்று வரும் தமிழாய்வுகள் குறித்த தகவல்கள் நூலில் இடம்பெற்றுள்ளன. உலக அளவில் தமிழாய்வின் பரந்துபட்ட இடத்தினை அறிஞர்களிடையே அறிவித்திட உதவும் இப்பார்வை நூல், இன்னொரு நிலையில் தமிழாய்வை மேற்கொள்ளப் பிறமொழி அறிஞர்களைத் தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

அடிகளார் திறனாய்வின் முக்கிய அம்சங்கள்

1. தமிழ் அனைத்துலக மொழி, தமிழரின் பண்பாடு வரலாற்றுச் சிறப்புடையது. உலகமெங்கும் தமிழர் பரவியுள்ளமையினால் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள், ஆங்காங்கே பதிவாகியுள்ளன.

2. தொல்காப்பியம் தமிழ் மொழியின் தனித்துவமான இலக்கண நூலாகும். தமிழின் வளத்தையும் தமிழரின் பண்பாடு, நிலவியல், சுற்றுப்புறச் சூழல், சமூகவியல் பற்றிய ஆழமான பதிவுகளையும் கொண்டது. கவிதையியல் பற்றிய நுட்பமான செய்திகளை வெளிப்படுத்துகிறது.

3. பண்டைத் தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். அவர்தம் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பூக்கள் இடம் பெறுகின்றன. இயற்கைக்கும் தமிழருக்குமான தொடர்பு, உலக இலக்கியப் பரப்பில் தனித்துவமானது.

4. கிரேக்கக் காப்பியங்களுடன் ஒப்பிடத்தக்க சிலப்பதிகாரம் தமிழரின் கலையியல், சமயம் பற்றிய கருத்தியல் வெளிப்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

5. கன்பூசியஸ் போன்றோர் போதிக்கும் அறநெறியை விடத் திருக்குறள் மேன்மையானது.

6. திராவிட மொழிக் குடும்ப மொழிகளைப் பற்றியும் தமிழ் மொழி பற்றியும் தொடர்ந்து ஆங்கிலம் வழியாக ஆய்விதழ்களில் எழுதுவதன்மூலம் தமிழ், சர்வதேச அறிஞர்களிடையே கவனம் பெறும்.

7. தமிழாய்வை ஆங்கிலம் உள்பட மேலைநாட்டு மொழிகளில் நிகழ்த்துதல் வேண்டும். இதன்மூலம் உலக அறிஞர்களின் பார்வை தமிழாய்வின் பக்கம் திரும்பும்; தமிழுக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும்.

8. தமிழகத்திற்கும் தென் கிழக்காசிய நாடுகளுக்குமிடையில் நிலவியல், அரசியல், பண்பாடு, சமயம், மொழியியல் உறவுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அறிஞர்களை அத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுத்தல்.

9. தமிழாய்வு என்பது மொழி, இலக்கியம் பற்றிய ஆய்வு மட்டுமன்று; இனம், சமயம், மொழியியல், மானுடவியல், சமூகவியல்,

வரலாறு, அகராதியியல், நாட்டுப்புறவியல் போன்ற பல் துறைகளும் ஒருங்கிணைந்தது ஆகும்.

அடிகளாரின் அடிப்படை நோக்கங்கள்

தமிழ்/தமிழர் பற்றி வாழ்நாள் முழுவதும் ஆக்கரீதியில் சிந்தித்த அடிகளாரின் அடிப்படையான நோக்கங்கள் பின்வருமாறு:

1. கன்பூசியஸ், செனக்கா போன்ற அறநூல் ஆசிரியர்களின் படைப்புகளைப் போலத் திருக்குறள் நூலும் உலகமெங்கும் பரவிட வகை செய்திடல் வேண்டும்.

2. ஹோமரின் ஒடிசியையும் வெர்ஜினியின் இலியத்தையும் போலச் சிலப்பதிகாரத்தையும் உலகம் போற்றுமாறு செய்திடல் வேண்டும். தமிழின் தனிச்சிறப்பான காப்பியமான சிலப்பதிகாரம் பல்வேறு சிறப்புகளை உடையது.

3. சாபோ, சேக்ஸ்பியர் போன்றோரின் காதற் பாக்களைவிட உயர்வான சங்க இலக்கியப் பாடல்கள் உலகமெங்கும் பரவுதல் வேண்டும்.

4. உலக இலக்கியத் திரட்டு நூல்களில் தமிழ் இலக்கியப் படைப்புகளும் இடம்பெறும் வகை செய்திடல் வேண்டும்.

5. தமிழுக்குப் பொது ஒலிப்புநிலை வேண்டும்.


6. உலகமெங்கும் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்/தமிழர் தனித்தன்மைகளை உலகுக்கு அறிவிக்குமாறு ஆவன செய்திட வேண்டும்.

அடிகளாரின் ஆய்வுப்போக்குப் பன்முகத் தன்மையுடையது. அவருடைய ஆய்வில் கடந்த காலம் குறித்த ஆழமான விமர்சனக் கண்ணோட்டமும் எதிர்காலம் குறித்த நுட்பமான தேடலும் பொதிந்திருக்கின்றன விருப்புவெறுப்புகளுக்கு இடந்தராமல் அறிவியலடிப்படையில் தரவுகளைத் திரட்டித் தருக்கரீதியில் ஆராய்ந்திடும் போக்கு அடிகளாரின் திறனாய்வில் அடிப்படை அம்சமாகும். மாறிவரும் புதிய உலகத்தின் தேவைக்கேற்பவும், ஏற்கனவே தேங்கிப் போயுள்ள சூழலைத் தகர்த்தெறியவும் அடிகளாரின் ஆய்வுகள் முயன்றன. நவீனப் போக்குகளின் தன்மைகளுக்கேற்ப, பண்டைய தமிழிலக்கியத்தின் சிறப்புகளை

எடுத்துரைப்பதில் அடிகளார் சிறந்து விளங்கினார். அடிகளாரின் முயற்சி காரணமாகச் சர்வதேசரீதியில் மேலைநாட்டு அறிஞர்களின் கவனம், தமிழாய்வின் பக்கம் பெருமளவில் திரும்பியது. தமிழ் / தமிழர் குறித்த திறனாய்வில் தனிநாயகம் அடிகளாரின் இடம் என்றும் முக்கியமானதாக விளங்கும்.

- **ந.முருகேச பாண்டியன்**

உலக நாடுகளுக்குப் பயணம்



1554 ஆம் ஆண்டில் லிசுபனில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி (Cartilha) நூல். 1950களில் தனிநாயகம் அடிகளாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு சப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து ஓர் ஆண்டிலேயே இருநூறிற்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார். இவ்வாறு விரிவுரைகளை நிகழ்த்தும் போது பல நாடுகளிலும் சிறப்பு பேராசிரியராகத் தமிழ்ப்பாடமும் நடத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்தார். இதன் பெறுபேறாக 1556 ஆம் ஆண்டில் தமிழில் அச்சிடப்பெற்ற Luso-Tamil Catechism (போர்த்துக்கீச-தமிழ் மொழியில் கிறித்தவம் சார்ந்த கேள்விக் கொத்து) "காட்டில்கா" (Cartilha) எனப் பெயரிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை அடிகளார் 1950 ஆம் ஆண்டில் லிஸ்பனில் கண்டெடுத்தார். அத்துடன், 1578 இல்

அச்சிடப்பெற்ற தம்பிரான் வணக்கம் (Thambiran Vanakkam), 1579 இல் வெளியிடப்பட்ட "கிறித்தியானி வணக்கம்" (Kiristiani Vanakkam). முதன் முதலாக அன்ரம் டீ பெறோனீக்கா என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ் - போர்த்துக்கீச மொழி அகராதி போன்றவற்றையும் கண்டெடுத்தார்.. அதில் பெறொனிக்கா அகராதியினை மீள்பதிப்பு செய்து அதனை முதல் தமிழாராச்சி மகாநாட்டில் மலேசியாவில் வெளியிட்டார்.

தனிநாயகம் அடிகளார் போர்த்துகலில் கண்டறிந்த *Arte da Lingua Malabar* என்ற கையேடே தமிழுக்காக அயலவர் எழுதிய முதல் இலக்கணக் கையேடு ஆகும். தாளில் எழுதப்பட்ட இந்தக் கையேடு என்றீக்கு அடிகளால் 1549-இல் வழங்கிய போர்த்துக்கீசிய மொழியில் அக்காலத்துத் தமிழ் மொழியை விளக்குகிறது. இந்தக் கையேட்டை ஜீன் ஹைன் (Jeanne Hein) என்ற அமெரிக்கர் 2013 ஏப்ரலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலிய தனிநாயகம் அடிகளார் | தமிழ்பாரம்பர்யமாதம்

https://archive.roar.media/tamil/main/history/roving-ambassador-for-tamil-xavier-thani-nayagam



தமிழின்பால் கொண்டிருந்த அறிவின் ஆழத்தினாலும் முதிர்ச்சியினாலும் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டவர் என்ற சிறப்பிற்குரியவர் தனிநாயகம் அடிகள்.

பிறப்பு

தனிநாயகம் அடிகளார் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்துறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்டானிஸ்லாஸ் மற்றும் சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு 1913ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பிறந்தார். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்டானிஸ்லாஸ் என்பதாகும்.

ஆரம்பக் கல்வி

இவர் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில மொழியில் பயின்றார்.





ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

இவர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றதுடன் ஆங்கிலம், இலத்தின், இத்தாலியம், பிரெஞ்சு, ஜேர்மன், ஸ்பானியம், போத்துக்கீயம், ரஷ்சியம், கிரேக்கம், இபுரு, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவரானார்.

சங்ககால இலக்கிய செய்யுள் முதல் உலகத் தமிழாய்வு வரை

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கன்குளம் என்னும் ஊரில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் 1940 முதல் 1945 வரை துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். முறையான தமிழைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங்கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயில ஆரம்பித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றார்.
1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இரத்தினசாமி, மற்றும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைக் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கியத்தில் '*சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை*' என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.லிட். பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றுள்ளது.

ஆசிரியராக பணியாற்றிய தனிநாயகம்





இலங்கை மற்றும் மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகம்

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் முனைவர் பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக் கொண்டார். 1961 முதல் 1968ஆம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியாராகவும் பணியாற்றினார். 1969 இல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிசு மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

‘Tamil Culture’ என்னும் ஆங்கில ஆய்விதழின் தோற்றம்

தமிழ் ஆராய்ச்சி ஒரு வரையறைக்குள் அடங்கியிருந்த காலமே அது எனலாம். இலக்கியமும் இலக்கணமுமே தமிழ் ஆராய்ச்சிக்குத் தகுந்த துறைகள் என அக்காலத்து அறிஞர்கள் எண்ணியிருந்த நிலையை மாற்றி தமிழ் இலக்கிய இலக்கணங்களோடு தமிழரின் கலைகள், வாணிகத் தொடர்புகள், வாழ்க்கை நிலை, உளவியல், அயல்நாட்டுத் தொடர்புகள் போன்றவையும் ஆராயப்பட வேண்டும் எனத் தமிழ் ஆராய்ச்சியில்

மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த பெருமை சேவியர் தனிநாயக அடிகளாருக்கு உரியது. தமிழ் ஆராய்ச்சி தமிழ்மொழியில் மட்டுமில்லாமல் பிறமொழிகளிலும் – குறிப்பாக ஆங்கிலத்திலும் பதிவாக வேண்டும் என உறுதியாக நம்பிய அவர் 'Tamil Culture' என்னும் ஆங்கில ஆய்விதழை 1952ஆம் ஆண்டில் தொடங்கினார். உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களையும் சென்றடைந்த அவ்விதழ் உலகளாவிய தமிழாராய்ச்சிக்கு வழிவகுப்பதாயிற்று. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிற நாட்டு அறிஞர்களும் தமிழ் ஆய்வில் ஈடுபட்டு தங்கள் ஆங்கிலக் கட்டுரைகளை 'Tamil Culture' இதழில் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதியுள்ளனர்.

தமிழாராய்ச்சி நிறுவனத்தை அமைக்க யோசனை!



தனிநாயகம் அவர்கள் எழுதிய நூல்களுள் சில

1963 ஆம் ஆண்டளவில் தமிழக அரசில் எம். பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த போது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் தனிநாயகம் அடிகளார் உலக நாடுகளில் உள்ள தமிழறிஞர்கள் யாவரையும் ஒன்று திரட்டி ஒரு குழுவாக அமைத்து தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நடத்தும் யோசனையை முன்வைத்துள்ளார். இதற்கான ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையினையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை எனவும் அதனால் இந்நிறுவனத்தை தாமே முன்னின்று உலகளவிலே நடத்த வேண்டும் என்ற உத்வேகம் கொண்டதனால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக வழி பிறந்தது என்றால் அது மிகையாகாது.

தனது முயற்சியில் வெற்றி கண்டார்!

அவரது அரிய முயற்சியின் விளைவாக *உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்* (International Association for Tamil Research, IATR) 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் முதல் கூட்டம் புது டெல்லியில் ஜனவரி மாதம் நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தில் தனிநாயகம் அடிகளாருடன், பேராசிரியர் கமில் சுவெலபில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வ. ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அழைப்பாளர்களாக இருந்து செயற்பட்டுள்ளனர். மொத்தம் 26 தமிழறிஞர்கள் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1964 ஜனவரி மாதம் 7 ஆம் நாள் ஆரம்பித்து வைத்துள்ளனர்.




தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் தனியாகம் அடிகளாரின் உரையின் போது

அந்த அமைப்பின் முதல் தலைவராக பிரான்ஸ் நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவராகவும், Oxford பல்கலைக்கழக பேராசிரியர் தோமஸ் பரோ, அமெரிக்க நாட்டு பேராசிரியர் எமனோ, பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் செக்கோஸ்லோவாக்கியா பிராக் பல்கலைக்கழக பேராசிரியர் கமில் சுவெலபில், தனிநாயகம் அடிகள் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

முதலாவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு – கோலாலம்பூர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ச்சியாக எட்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை பல உலக நாடுகளில் நடத்தியுள்ளது. அடிகளார் உயிருடன் இருந்த காலப்பகுதியில் நான்கு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இவர் பொதுச் செயலாளராகவிருந்து முதல் மாநாட்டினை 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 – 23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தியுள்ளார்.




தனிநாயகம் அவர்களில் சிலை

1961ஆம் ஆண்டில் அவர் மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றியமை இம்முயற்சிக்கு பெரிதும் மிகவும் துணைநின்றது. அப்போது அமைச்சர்களாக இருந்த வி. தி. சம்பந்தன், வி. மாணிக்கவாசகம் ஆகியோருடன் அடிகளார் பேணிய நல்லுறவால் மலேசிய அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. மாநாட்டிற்கு மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தலைமை தாங்கியுள்ளார். தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். பக்தவத்சலமும் கலந்து சிறப்பித்துள்ளார். புரொயென்காவின் போர்த்துக்கீச-தமிழ் அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டுள்ளார்.

தனிநாயகம் அடிகளாரின் சிறப்பு துணுக்குகள்

- 1945ஆம் ஆண்டு 32ஆம் வயதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழை திறம்பட பயின்றுள்ளார்.
- 'சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை' என்ற அவர்துபி ஆய்வு கட்டுரை ஐரோப்பியத் திராவிடவியல் பேரறிஞராகிய முனைவர் கமில் சுவலபில் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ் மேல் கொண்ட பற்றால் 1949 மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில் உலகின் பல்வேறு நாடுகளு பயணம் மேற்கொண்டு தமிழ்த் தூது நிகழ்த்தியுள்ளார்.
- ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரேசில், எக்குவடோர், பெரு, மெக்சிக்கோ மற்றும் இத்தாலி என்பன அவர் உரை நிகழ்த்திய நாடுகளாகும்.
- அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் தமிழின் சிறப்பைப் பற்றி ஒரே ஆண்டில் 200 விரிவுரைகள் ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையை மாற்றி உலக அரங்கில் பல நாடுகளில் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கு உரியது.
- தமிழ், ஆங்கிலம், இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்ச், ஜேர்மன், போர்த்துக்கேயம், ஸ்பானிஷ் என பல மொழிகளைக் கற்றுள்ளார் அடிகளார்.
- ஆகவே அம்மொழிகளிலெல்லாம் தமிழ் மொழிபற்றி ஆய்வுரை நிகழ்த்தவும் ஆய்வுக் கட்டுரை வடிக்கவும் வல்லவராகத் திகழ்ந்துள்ளார்.
- ஐரோப்பிய அறிஞர்கள் பலர் தங்களது பல்கலைக்கழகத்தில் தமிழ்பற்றிய ஆய்வுரை நிகழ்த்துமாறு அடிகளாரை அழைத்துள்ளனர்.
- மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராக எட்டு ஆண்டுக்காலம் பணிபுரிந்த அடிகளார் பல புதிய பொருள்பற்றியும் துறைகள் பற்றியும் அப்பல்கலைக்கழகத்தில் தமிழாய்வு நடைபெற வழிகோலியுள்ளார்.
- அந்த்தாம் தெ ப்ரோயென்சா அடிகள் இயற்றிய தமிழ் போர்த்துக்கேய அகராதியின் மறுபதிப்புக்குத் தனிநாயக அடிகளார்

எழுதியுள்ள அரிய ஆய்வுரை அறிஞருலகத்தின் பாராட்டினைப் பெற்ற ஒன்றாகும்.

- “Reference Guide to Tamil Studies” என்ற 122 பக்கங்களைக் கொண்ட உசாத்துணை நூலில் 1335 நூல்களைப் பற்றிய குறிப்புக்களைச் சேர்த்து நூலாக வெளியிட்டுள்ளார்.
- தமிழாய்வில் ஈடுபட விரும்பும் வெளிநாட்டவருக்கு ஒரு உசாத்துணை நூலாக விளங்கவே இதனை வெளியிட்டுள்ளார்.
- இலங்கையிலிருந்து வெளியான சைமன் காசிச்செட்டி ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் புளூட்டார்க் என்ற நூலை பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரைக் கொண்டு கூடுதல் செய்திகளைச் சேர்த்து பிழை களைந்து வெளியிட ஏற்பாடு செய்ததும் இவரே ஆகும்.
- பேராசிரியப் பணி,ஆய்வுப் பணி, உலக அரங்கில் தமிழ்த் தூதுப்பணி, கள ஆய்வுப் பணி, ஆய்விதழ், ஆசிரியப் பணி என இவரது பணிகள் ஏராளம்.
- The Carthaginian, Clergy Nature in the ancient poetry, Aspects of Tamil Humanism, தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் நாளையும், தமிழ்த்தூது, ஒரே உலகம், திருவள்ளுவர், உலக ஒழுக்கவியலில் திருக்குறள் என்பன இவரது நூல்களாகும்.

தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ் தூதுவர் தனிநாயகம் அடிகளார் 1980 செப்டம்பர் முதலாம் திகதி மாலை 6.30 மணியளவில் இறையடி சேர்ந்துள்ளார்.

1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவரது சிலை ஒன்றும் தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவரின் இறப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

சென்னையில் 2013 பெப்ரவரி 16 ஆம் திகதி தனிநாயக அடிகளாரின் நினைவை போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்க விழா நடைபெற்றுள்ளது.

கௌரவம்

- 1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவரது சிலை ஒன்றும் தமிழகக் கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவரின் இறப்புக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
- நெடுந்தீவு மக்கள் தமது மண்ணின் மைந்தனாகிய தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.
- 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனிநாயக அடிகளின் தமிழ்ச் சேவையினை நினைவு கூர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராகப் பணியாற்றியபோது அவருக்கு இறப்புக்குப் பின்னரான கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

சேவியர் தனிநாயகம் அடிகளார் அவர்களின் தமிழ் வாழ்க்கை

https://groups.google.com/g/minTamil/c/dZjyoGKC4ac



மு இளங்கோவன்

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வடமொழி வால்லாண்மை மேல்நாடுகளிலும் கொடிகட்டிப் பறந்தது.அதன் பயனாக உலக மொழியியல் அறிஞர்கள் பலரும் தொடக்கதில் சமற்கிருதப் பட்டம் பெறுவதை இந்திய இலக்கியத்தை அறிவதன் உயர்

தகுதியாக நினைத் திருந்தனர்.இன்று அறியப்பட்டுள்ள அயலகத் தமிழறிஞர்கள் என்பவர்கள் பெரும்பாலும் சமற்கிருத மொழிப்பயிற்சியுடையவர்களே ஆவர்.அப்பெரு மக்களைத் தமிழின்பால் ஈடுபாடு கொள்ள அதற்குரிய வாய்ப்புகளை, சூழல்களை உருவாக்கியவர்களுள் தலைமையானவராகத் தனிநாயகம் அடிகளாரைக் குறிப்பிடலாம்.

அடிகளார் இளமைக் காலத்தில் ஆங்கிலமொழியில் மிகச்சிறந்த புலமை பெற்றிருந்தாலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் தமிழ் படிக்க வந்த பிறகு அவரின் தமிழ்வேட்கை மேம்பட்டது எனலாம்.தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், அ.சிதம்பரநாதனார் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களின் வழியாகத் தமிழ் இலக்கியப் பரப்பை உணர்ந்த அடிகளார் பின்னாளில் தமிழ் ஆய்வுகளில் ஈடுபடவும் தமிழ்வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடவும் அவரின் அண்ணாமலைப்பல்கலைக்கழகப் படிப்பு பெருந்துணை புரிந்தது.உலகின் 51 நாடுகளுக்குச் சென்று வந்தவர் அடிகளார்.

"அமெரிக்க ஐக்கியநாட்டுக் கொலம்பியா,ஹார்டுவர்டு,கலிபோர்னியா போன்ற பல்கலைக் கழகங்களில் கீழ்த்திசை நாடுகளைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி நடந்துவருகிறது-ஆயினும் தமிழைப் பற்றிய ஆராய்ச்சி மிகக் குறைவேயாம்" என வருந்திய தனிநாயக அடிகளார் அக்குறையைப் போக்கும் மனவிருப்பம் கொண்டு உலகத்து அறிஞர்களைத் தமிழின்பக்கம் திருப்பத் தமிழ்குறித்த செய்திகளை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினால்தான் பிறநாட்டார் தமிழின் சிறப்பை உணர்வார்கள் என நினைத்து tamil culture என்னும் முத்திங்களிதழை(1952 பெப்ருவரி)த் தொடங்கியும், உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் கண்டு அதன் வழியாக உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறக் களம் அமைத்தும் உலகத்து அறிஞர்களின் ஆய்வுகளைத் தமிழின் பக்கம் திருப்பினார்.அன்னாரின் தமிழ வாழ்வை இங்கு எண்ணிப் பார்ப்போம்.

இலங்கை யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சார்ந்த என்றி எசுதனிசுலாசு கணபதிப்பிள்ளை,செசில் இராசம்மா வசுதியாம்பிள்ளை ஆகியோரின் தலைமகனாகப் பிறந்தவர் நம் தனிநாயக அடிகளார்.இவர் பிறந்த ஊர் கரம்பொன் ஆகும்.இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சேவியர் என்பதாகும்.தந்தையின் பெயரை இணைத்துச் சேவியர் எசுதனிசுலாசு என அழைக்கப் பெறலானார்.பின்னாளில் தம் மரபு வழி முன்னோரான

தனிநாயகம் என்பாரின் பெயர் இணைத்துச் சேவியர் தனிநாயகம் எனப் பெற்றுத் தமிழர்கள் உள்ளத்தில் தனிநாயகமாக ஆட்சி செலுத்திவருகிறார்.

இளமைக் காலத்தில் ஆங்கில ஆர்வம் மிக்கிருந்த சேவியர் அடிகளார் 1931-34 வரை கொழும்பில் மெய்யியல் பயின்றார்.குருத்துவக் கல்லூரியில் காரணம் குறிப்பிடாமல் வெளியேற்றப்பட்டார்.1934 இல் கேரள மாநிலம் திருவனந்தபுரம் சார்ந்த பேராயர் இலங்கை சென்றபொழுது அடிகளாரின் நிலையுணர்ந்து அடிகளாரை உரோமையில் உள்ள உர்பன் பல்கலைக்கழகத்திற்குப் படிக்க அனுப்பி வைத்தார். ஆங்கிலம்,இலத்தீனில் முன்பே புலமைபெற்றிருந்த அடிகளார் அங்கு இசுபானியம், போர்த்துக்கீசியம், பிரஞ்சு,செர்மன், கிரேக்கம்,எபிரேயம் உள்ளிட்ட மொழிகளில் பயிற்சிபெற்றார். உர்பன் பல்கலைக்கழகத்தில் 43 நாடு சார்ந்த 250 மாணவர்கள் கல்வி பயின்றனர்.ஐந்தாண்டுகள் அவர்களுடன் பயின்ற அடிகளார் உலகு தழுவிய சிந்தனையைப் பெற்றார்.

உரோமாபுரியில் பயின்றபொழுது தமிழார்வம் இவருக்குத் தழைக்கத் தொடங்கியது. வீரமா முனிவர் கழகம் என்னும் அமைப்பை நிறுவித் தமிழ் பயிலத் தொடங்கினார். வாட்டிகன் வானொலியில் பலமுறை தமிழில் உரையாற்றும் பேறு பெற்றார்.1938 மார்ச்சு 19 இல் உரோமையில் கத்தோலிக்க குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1939 இல் திருவனந்தபுரம் சமயத் தொண்டிற்கு வந்தவர் அடுத்த ஆண்டு தூத்துக்குடியில் சமயப்பணிக்கு வந்தார்.194-45 வரை வடக்கன்குளத்தில் புனித தெரசாள் பள்ளியில் துணைத்தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார்.அக்காலத்தில் பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய அய்யர் என்பவரிடம் தமிழ்கற்றார்.அந்த உந்துதலில் தமிழ் படித்துப் பட்டம்பெற விரும்பிய அடிகளாருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆதரவுக்கை நீட்டியது.

அரசர் முத்தையவேள் அவர்களின் பரிந்துரைப்படி விருந்தினர் விடுதியில் தங்கிப் படித்த பொழுது அவரின் உடன் வகுப்புத் தோழராக விளங்கியவர் வ.அய்.சுப்பிரமணியன் அவர்கள் ஆவார்.1945 இல் தம் முப்பத்தியிரண்டாம் அகவையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வந்த அடிகளார் முதுகலை வகுப்பை 1947 இல் நிறைவு செய்தார்.1949 இல் "பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை"(Nature

in Ancient Tamil Poetry) என்னும் பொருளில் ஆராய்ந்து மூதறிஞர்(எம்.லிட்) பட்டம்பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழறிவும் அடிகளாரின் பரந்துபட்ட பன்மொழியறிவும் உலகு தழுவிய சிந்தனையும் அவரை உலகத்தமிழராக உருமாற்றியது.அதன்பிறகு அடிகளார் ஈராண்டுகள்(1949-50) உலகெங்கும் தமிழ்ப்பயணம் மேற்கொண்டு தமிழின் சிறப்பு குறித்து உரையாற்றினார். அவ்வகையில் மலேசியா,சீனா,சப்பான், அமெரிக்க,ஐரோப்பிய நாடுகள் தொன்னாப்பிரிக்கா,இத்தாலி,எகிப்து உள்ளிட்ட நாடுகளுக்கு மேற்கொண்ட பயணம் குறிப்பிடத்தகுந்தது.

அந்த அந்த நாடுகளில் தமிழ் சிறப்பு பற்றி பேசியதுடன் அமையாமல் அங்குத் தமிழுக்கு,தமிழர்களுக்குத் தொடர்புடைய செய்திகள் உள்ளனவா என்பதையும் அடிமனத்தில் பதித்துக்கொண்டார். உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் தமிழாயுவுகள் நடைபெறாமை அடிகளார்க்குப் பெருங்குறையாக இருந்தது. அவற்றை மாற்றும் திட்டத்தை அடிமனத்தில் கொண்டவராக அடிகளார் உலகை வலம் வந்தார்.

தனிநாயக அடிகளார் சப்பான் நாட்டில் தங்கியிருந்தபொழுது சப்பான் மொழிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்புகளை எண்ணிப்பார்த்தார் தமிழ் ஒலிகள்,பண்பாட்டுத்தொடர்புகள்,பா அமைப்புகள் பற்றிய ஒற்றுமைகளை எண்ணி மகிழ்ந்தார்.

அவாய் தீவுகளில் உள்ள மக்கள் பழந்தமிழர்களைப் போல் மலருக்கு முதன்மை தருவதைக் கண்டு வியந்தார்.தழையுடை உடுத்தி வந்தவர்களைக் கண்டு சங்கத்தமிழ் மாந்தர்களாக அவர்களை உள்ளூர எண்ணி உவந்தார்.அந்த அந்த நாடுகளில் வானொலி, தொலைக் காட்சிகளில் தமிழ் தமிழர் பற்றி அடிகளார் உரையாற்றினார்.

1954 இல் தாய்லாந்து சென்ற அடிகளார் அங்கு மன்னர் முடிசூட்டு விழாவில்கலந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றார்.அப்பொழுது அங்குத் தமிழில் உள்ள திருவாசகப் பாடல்கள்(ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும்...) 'தாய்'மொழியில் உள்ள எழுத்துகளில் எழுதி வைத்துக் கொண்டு அப்பாடல்களைப் பாடியதைக் கண்ட அடிகளாருக்கு வியப்பு

மேலிட்டது. தாய்லாந்துக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பை முதன்முதல் வெளிப்படுத்தியவர் அடிகளாரே ஆவார்.

அடிகளார் உலக நாடுகளுக்குச் சென்று வந்த பட்டறிவாலும் மிகச் சிறந்த பட்டப் பேறுகளாலும் 1952 முதல்1961 வரை(ஈராண்டு முனைவர் பட்ட ஆய்வுக்கு இலண்டன் சென்றமை தவிர)இலங்கையில் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்விரிவுரையாளர் பணியேற்றுத் திறம்படப் பணிபுரிந்தார்.இலண்டன் பல்கலைக்கழகத்தில் பழந்தமிழ் இலக்கியங்களில் கல்விச்சிந்தனைகள்(Education Thought in Ancient Tamil Literature)என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.முனைவர் பட்டம்பெற்றுத் திரும்பிய பிறகு அடிகளார் இலங்கையில் பணிமுடியாதபடி அவருக்கு அரசால் இடையூறுகள் உண்டாயின.

அடிகளார் இலங்கை அரசியல் பணிகளில் தலையிடுவதாக நினைத்த அரசு அவர்மேல் கண்காணிப்பைத் தொடங்கியது.அந்நாளில் இலங்கையில் பரவி வந்த சிங்களம் உயர்வு என்ற சிந்தனையால் தமிழர்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழுக்கு உரிய முதன்மைக்குக் குரல் கொடுத்தனர்.தமிழ்களுக்கு இலங்கையில் உரிய பங்களிப்பு கிடைக்கவேண்டும் என்பதில் அடிகளார் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.அதன்பொருட்டு நடந்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கு கொண்டும் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார்.இதனால் அடிகளார் அமைதியாகப் பணிபுரியும் சூழல் அமையாமல் போனது.

அந்த நாளில் மலேசியாவில் உள்ள மலேசியப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்தஇந்தியவியல் துறையில் அடிகளார் பணியில் இணையும் வாய்ப்பு அமைந்தது.தமிழர்களின் தலைவராக விளங்கிய தமிழவேள் கோ.சாரங்கபாணியார் உள்ளிட்ட தமிழர்கள் அடிகளார் மலேசியாவில் பணிபுரியவேண்டும் என்ற விருப்பினர் ஆயினர்.அவ்விருப்பத்தின்படி அடிகளார் 1961 முதல் 1969 வரை இந்தியவியல் துறையில் பணிபுரிந்து இந்தியவியல் துறையைத் தமிழியல் துறையாக மாற்றினார்.அடிகளாருக்குப் பின்புலமாக இருந்து இந்தியவியல் துறை வளரக் காரணமாக சாரங்கபாணியார் விளங்கினர்.

இந்தியவியல்துறையில் வடமொழிக்கு முதன்மை தரவேண்டும் என்ற இந்திய அறிஞரின் பரிந்துரை சாரங்கபாணி அவர்களின் தலைமையில்

செயலிழந்தது.அடிகளார் பின்புலமாக இருந்து தமிழுக்கு அங்கு முதன்மை கிடைக்க ஆவன செய்தார்.மிகப்பெரிய நூலகம் உருவாக்கப்பட்டது.பிறதுறைப் பேராசிரியர்களைக் கொண்டு திருக்குறள் சீனமொழியிலும் மலாய்மொழியிலும் மொழிபெயர்க்க அடிகளார் காரணராக விளங்கினார்.பிற துறை மாணவர்கள் தமிழ் மொழியைப் படிக்க அடிகளார் வழியேற்படுத்தினார்.

1964 இல் தில்லியில் நடந்த கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டிற்கு உலகெங்கிலு மிருந்து தமிழறிஞர்கள் வந்திருந்தனர்.நீண்ட நாட்களாகத் தமிழாராய்ச்சியை உலக அளவில் நடத்தவேண்டும் தமிழறிஞர்களைத், தமிழறிஞர்களின் பணிகளை ஒருமுகப்படுத்தவேண்டும் என எண்ணியிருந்த அடிகளார் இம்மாநாட்டை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என நினைத்தார். 07.01.1964 இல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டது.

தனிநாயகம் அடிகளார்,வ.அய்.சுப்பிரமணியன் ஆகியோர் கைச்சாத்திடப்பட்ட அறிக்கை வழி அறிஞர்கள் ஒன்றிணைந்தனர்.அம்மன்றம் தமிழாராய்ச்சிக்கு மாநாடு நடத்தும் கொள்கை கொண்டது.அதன் அடிப்படையில் தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியால் உலகத் தமிழ் மாநாடு மலேசியப் பல்கலைக்கழக வளாகத்தில் 1966 ஏப்பிரல்17 முதல் 23 வரை மிகச் சிறப்பாக நடந்தது.132 பேராளர்கள்,40 பார்வையாளர்கள் கலந்துகொண்டனர்.146 கட்டுரைகள் படிக்கப்பட்டன.அதன் பின்னர் 1968 இல் சென்னையிலும், 1970 இல் பரான்சு தலைநகர் பாரிசிலும், நான்காம் மாநாடு இலங்கையில்1974(சனவரி3-9) ஆம் ஆண்டிலும் நடந்தன.இலங்கை மாநாடு மிகப் பெரிய கலவரத்தில் முடிந்தது.தமிழுக்கும் தமிழர்களுக்கும் எதிராகச் சிங்களர்களும் தமிழர்கள் சிலரும் இத் தீச்செயல்களில்ஈடுபட்டனர்.

உலகெங்கும் சென்று தமிழ் பரப்பிய அடிகளாரின் இறுதிப் பத்தாண்டு வாழ்க்கை இலங்கையில் அமைந்தது.இலங்கையில் இருந்தாலும் அயல்நாடுகளுக்கு இடையில் சென்று தமிழ்ப்பணியில் ஈடுபட்டு வந்தார்.

அடிகளாரின் ஆய்வுரைகளின் தொகுப்பாக தமிழ்த்தூது நூலும்,உலகப்பணங்களின் பட்டறிவு,தமிழ்ச்சிறப்பு விளக்கும் வகையில் ஒன்றே உலகம் நூலும் விளங்குகின்றன. அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் அடிகளார் ஆற்றிய உரை திருவள்ளுவர் என்னும் பெயரில் நூலாகியுள்ளது.

அடிகளாரின் செயல்பாடுகள் ஆரவாரத்தன்மையுடையது எனவும் இவர் கூட்டிய மாநாடுகளால் தமிழுக்கு ஆக்கமில்லை எனவும் பாவாணர் குறிப்பிடுவது உண்டு.

உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களை ஒன்று திரட்டித் தமிழ் தொடர்பாக இது வரை நடந்துள்ள ஆய்வுகளை ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ள பெரும்பங்காற்றியது உலகத் தமிழ்மாநாடுகள் எனில் மிகையன்று.தமிழாய்வுகள் உலகத் தரத்தை எட்ட இம்மாநாடுகள் வழிகோலின.

தமிழகத்துடன் அயல்நாட்டு அறிஞர்கள் தொடர்புகொள்ளவும் அயல்நாட்டு அறிஞர்களின் ஆய்வைத் தமிழர்கள் அறியவும் இம்மாநாடுகள் பெருந்துணைபுரிந்தன.இவ்வகையில் குறிப்பிட்ட ஆண்டு இடைவெளிகளில் நடந்த உலகத் தமிழ் மாநாடுகளில் மதுரையில் நடந்த மாநாடு குறிப்பிடத்தகுந்தது.தமிழ்ப்பல்கைலக்கழகம் உருவாவதற்கு இம்மாநாடு வாய்ப்பாக அமைந்தது.தமிழக அந்நாள் முதல்வர் ம.கோ.இரா.அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை அறிவித்தது அம் மாநாட்டிலேயாகும்.மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் இறுதிப் பேருரை அந்த மாநாட்டுன் நிறைவுற்றதும் இங்கு எண்ணிப்பார்க்கவேண்டிய செய்தியேயாகும்.

மதுரை மாநாட்டிற்கு உலகெங்கிலும் இருந்து அறிஞர்கள் வந்து குழுமியவண்ணம் இருந்தனர்.தங்கள் ஆய்வுரைகள் வழியாகப் புதிய தமிழ் எழுச்சிக்கு வித்திட வந்தவர்களுக்கு முதல் நிகழ்வாக அமைந்தது தனிநாயக அடிகளாருக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வாகும். உலகத் தமிழ் மாநாட்டுக்கு வித்திட்ட தனிநாயகம் அடிகளார் இல்லாமல் அம்மாநாடு நடைபெறுவதாக அமைந்துவிட்டது.ஆம்.தமிழை உலகம் முழுவதும் பரவச் செய்த தனிநாயகம் அடிகளார் தமிழன்னையின் திருவடிகளில் மீளாத்துயில்கொண்டது 01.09.1981.

தனிநாயகம் அடிகளார் நினைவாகத் திருச்சிராப்பள்ளியில் அருட்தந்தை அமுதன் அடிகளார் அவர்கள் இதழியில் கல்லூரி ஒன்று நடத்தி

வருகின்றமையும் அவர்தம் புகழை நிலைப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்.

நனி நன்றி :

தமிழ் ஓசை நாளேடு,களஞ்சியம்,அயலகத் தமிழறிஞர் தொடர் 10,சென்னை,30.11.2008
தவத்திரு அமுதன் அடிகள்,தனிநாயகம் அடிகளார் நூல்,உ.த.நி.வெளியீடு
முனைவர் பொற்கோ
பிரஞ்சு நிறுவன நூலகம்(IFP),புதுச்சேரி
தமிழ்நேசன்

தன்னிகரற்ற தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார்

https://thfwednews.blogspot.com/2017/04/blog-post.html



தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

நம் மொழியுரிமைகள்

தன்னிகரற்ற தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார்

தனிநாயகம் அடிகளார் உலகப் புகழ்பெற்ற தமிழ்ப் பேரறிஞர். உலக அரங்கில் தமிழுக்கு இடம் பெற்றுத் தந்த ஒப்பற்ற தமிழ்த் தொண்டர் இவர். 20ம் நூற்றாண்டில் இவரைப் போல உலகளாவிய தமிழ்ப்பணி புரிந்தவர் வேறொருவருமில்லை எனத் துணிவுடன் கூறலாம்.

இத்தகைய பெரும் புகழ்பெற்ற தமிழ் அறிஞரை தமிழுலகம் எளிதாக மறந்து வருவதைக் காண்கின்றோம். தனிநாயகம் என்றாலே உலகளாவிய தமிழ் மாநாடுகள் தாம் நம் மனதில் நிழலாடுகின்றன.

ஐரோப்பிய, அமெரிக்க நூலகங்களில் ஆய்ந்தறிந்து தமிழில் முதன் முதலாக வெளிவந்த கார்திலா, தம்பிரான் வணக்கம், கிரிசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு போன்ற அரியத் தமிழ் நூற்களைத் தமிழுலகத்துத் தந்தவர் அவர்.

இத்தகைய சிறப்பு மிக்க தனிநாயக அடிகளாரின் அனைத்துப் படைப்புக்களையும் தொகுத்து மூன்று தொகுதிகளாக 2000 பக்கங்களில் வெளிக்கொணர்ந்த வரலாற்றுப் பெருமை அருட்தந்தை அமுதன் அடிகளுக்கு உண்டு.

அமுதன் அடிகளை முதன் முதலில் 2015ம் ஆண்டு மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 9வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் தான் நான் சந்தித்தேன். பிரான்சில் வசிக்கும் நண்பர் திரு.சாம் விஜய் எனக்கு அமுதன் அடிகளை அறிமுகப்படுத்தி வைத்து, தனிநாயகம் அடிகளாரைப் பற்றிய விரிவான ஆய்வினைச் செய்து வருபவர் இவர் என்றும் அவர் பெயராலேயே ஒரு கல்லூரியை அமைத்து வருபவர் என்றும் விவரித்தார். அன்று அந்த நிகழ்வில் என்னால் அமுதன் அடிகளாருடன் விரிவாக நேரம் ஒதுக்கி உரையாடி தனிநாயகம் அடிகள் பற்றி பேச வாய்ப்பு அமையவில்லை. ஆயினும் தமிழகம் செல்லும் போது அவரை நேரில் சந்தித்து தன்னிகரில்லா தமிழ்த்தொண்டு ஆற்றிய தனிநாயகம் அடிகள் பற்றிய வரலாற்றுப் பதிவு ஒன்றினைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் எனக்கு மிகுந்தது.

2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத்தின் திருச்சி பகுதியில் இரண்டு நாட்களை ஒதுக்கி அங்குள்ள வரலாற்றுச் சான்றுகளைப் பதிவாக்கம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தேன். திருச்சி தூயவளனார் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திரு.சூசை அவர்கள் எனக்கு இந்தப்பணியில் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை மறக்க இயலாது. இந்த வரலாற்றுப் பதிவு முயற்சியில் அமுதன் அடிகளாரை நேரில் சந்தித்து உரையாடி தனிநாயகம் அடிகளாரின் சிறப்புக்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். திரு.சூசை மற்றும் முனைவர்.வீரமணி நான்

மூவருமாக மதிய வேளையில் அமுதன் அடிகளார் நடத்தி வரும் தனிநாயகம் அடிகளார் கல்லூரிக்குச் சென்று அங்கு அவர் அளித்த விரிவான பேட்டியைப் பதிவு செய்தோம். அது கடந்த ஆண்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் விழியப் பதிவாக வெளியீடு கண்டது.

தனிநாயகம் அடிகளார் யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்தவர். இவர் 2.8.1913ம் ஆண்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் சேவியர் நிக்கொலஸ் என்பதாகும். சேவியர் இறைப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று பெற்றோரின் விருப்பம் இருந்தது. ஆனால் சேவியருக்கு அத்துறையில் நாட்டம் ஏற்படவில்லை. தனது பள்ளி இறுதி ஆண்டில் லியோ டால்ஸ்டாய் எழுதிய புத்துயிர்ப்பு என்னும் நூலை தன் பதினைந்தாம் வயதில் படித்ததால் அவருக்குச் சமைய சேவையிலும் கல்விச்சேவையிலும் நாட்டம் ஏற்பட்டது என அவரே குறிப்பிடுகின்றார்.

இளமையில் உயர்நிலைப்பள்ளியில் அவர் தமிழ் மொழியில் பயின்றாலும் அவருக்கு நாட்டம் ஆங்கில மொழியின் பால் அதிகமாக இருந்தது. அதற்காக அவர் அதிக முயற்சிகள் மேற்கொண்டு ஆங்கிலம் எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டார். கொழும்பு புனித பெர்நார்து கல்லூரியில் மெய்யியற் கல்வியைப் படித்தார். 1934ம் ஆண்டு இவர் ஐரோப்பாவில் உள்ள ரோம் நகரின் உர்பன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பு கிடைத்து அங்குக் கல்வி கற்கச் சென்றார். அங்கு சமயக் கல்வி கற்ற அவர் ஸ்பானிஷ், போர்த்துகீசியம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம் ஆகிய மொழிகளையும் பயின்றார்.

தமிழகம் வந்த சேவியர் நெல்லை மாவட்டத்தின் வடக்கன்குளம் எனும் ஊரில் உள்ள புனித தெரசாள் உயர்நிலைப்பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியராக 1941ம் ஆண்டில் பதவி ஏற்றுக் கொண்டார். அங்கு ஒரு பண்டிதரிடம் தமிழை நன்கு கற்றுக் கொண்டார். இந்தக் காலகட்டத்தில் தனது பெயரை தனிநாயகம் அடிகள் என மாற்றிக் கொண்டார். பின்னர் 1945ம் ஆண்டில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதுகலை ஆய்வினைத்தொடங்கினார். 1948ம் ஆண்டில் தூத்துக்குடியில் இவர் தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பினை ஏற்படுத்தினார். தமது நூல்களான தேம்பாவணி ஆராய்ச்சி, திருக்காவலூர்க் கோவில், இயேசுநாதர், பத்துப்பாட்டு ஆங்கில மொழி பெயர்ப்பு, திராவிடர் வரலாறு ஆகிய தனது நூல்களை இந்த அமைப்பின் வழி வெளியிட்டார்.

1949 முதல் இவரது உலகளாவிய பயணங்கள் தொடங்கின. அன்றைய மலேயா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, பனாமா, எக்குவாடோர், பெரு, சிலி, அர்ஜெண்டீனா, உருகுவே, பிரேசில், மெக்சிக்கோ, ட்ரினிடாட், ஜமைக்கா, மார்த்தினீக், ஆப்பிரிக்க நாடுகள், இத்தாலி, பாலஸ்தீனம், எகிப்து என தொடர்ச்சியாகப் பல நாடுகளுக்கு இவர் பயணம் செய்தார். அங்கெல்லாம் தான் கலந்து கொண்ட நிகழ்வுகளில் தமிழ்மொழி பற்றியும், தமிழர் கலை, பண்பாடு, வரலாறு பற்றியும் உரையாற்றினார். அமெரிக்காவில் மட்டும் இருநூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் பங்கெடுத்துக்கொண்டார் என்பதை அறியும் போது அவரது ஆக்கமும் ஊக்கமும் வியப்பினை நமக்களிக்கின்றது.

தாய்லாந்துக்குச் சென்றிருந்த அடிகளார் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார். அங்கு முடிசூட்டு விழாவில் இடம்பெற்ற ஒரு பாடல் தமிழில் அமைந்த திருவெம்பாவை தான் என்பதை அறிந்து அதனை அரச குருவிடம் குறிப்பிட்டார் அடிகளார். தமிழ் இன்றளவும் அரச சம்பிரதாயங்களில் இடம்பெறுவதை நோக்கும் போது தமிழகத்திற்கும் தாய்லாந்திற்கும் உள்ள நீண்ட நெடிய உறவினை ஆராய வேண்டும் என்ற எண்ணம் நமக்குத் தோன்றுவது போலவே அடிகளாருக்கும் தோன்றியது. பல்லவர்கால, சோழர்கால சிற்பங்களும் கட்டட அமைப்புக்களும் தாய்லாந்தில் பரவி இருப்பதைத் தமது தேடலில் உணர்ந்தார். இதே போல கம்போடியா சென்று அங்கு அங்கோர்வாட் கோயிலை ஆராய்ச்சி செய்து தனது கருத்துக்களை எழுதினார் அடிகளார்.

தனிநாயகம் அடிகளாரின் பயணங்கள் தொடர்ந்தன. அவரது தேடலும் தொடர்ந்தது.

உலகின் பல நாடுகளில் பணியாற்றும் பல தமிழறிஞர்களை ஒன்றிணைக்க வேண்டும், ஆராய்ச்சிகளை ஒருமுகப்படுத்த வேண்டும் என அவர் எண்ணினார். 1952ம் ஆண்டில் Tamil culture என்ற ஒரு இதழை அவர் தொடங்கினார்.

1964ம் ஆண்டு இந்தியாவில் டில்லி நகரில் நடைபெற்ற கீழைத்தேச அறிஞர்களின் மாநாட்டின் போது உலகத் தமிழ்ராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மலேசியாவில் முதல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை ஒன்று கூட்டும் முயற்சியில் தனிநாயகம்

அடிகளார் தீவிரமாக ஈடுபட்டார். இதற்கு அமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாண்புமிகு துன் வி.தி.சம்பந்தன் அவர்கள் மாநாட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டார். அடிகளார் துணை தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ள, திரு. வி.செல்வநாயகம் பொதுச் செயலாளராக நியமனம் பெற்றார்.

அடிகளார், டான்ஸ்ரீ.மாணிக்கவாசகம், திரு.வி.செல்வநாயகம் ஆகியோர் பெருமுயற்சியால் மாநாட்டுக்கான செலவுத்தொகை திரட்டப்பட்டது. பலரது ஒத்துழைப்புடன் இதுவரை வரலாறு காணாத மாநாடு மலாயா பல்கலைக்கழக வளாகத்தில் 1966ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 முதல் 23ம் தேதி வரை சிறப்புடன் நடைபெற்றது. 132 பிரதிநிதிகளும் 40 பார்வையாளர்களும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உலகின் 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றிய அப்போதைய மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் தனிநாயகம் அடிகளாரின் பன்மொழிப்புலமையையும், அவரது தலைமைப்பண்பையும் பாராட்டிப் பேசியதோடு மலேசியாவில் தமிழ் சிறப்புற வளர்ந்து வருவதைச் சுட்டிக் காட்டியும், தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் தமது உரையில் அன்று குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இந்த மாநாடு முடிந்த பின்னர் அதன் தொடர்ச்சியாக மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடும் பணியில் ஈடுபட்டு அதனையும் சிறப்புடன் செய்து முடித்தனர் மாநாட்டுச் செயலவை குழுவினர் . இன்று வரை தமிழுக்காக அகில உலக அளவில் நடைபெற்ற மிகச் சிறந்த மாநாடு என்ற பெருமையைக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வாக இது கருதப்படுகின்றது என்பது தனிநாயகம் அடிகளாரின் முயற்சிக்கு ஒரு மணிமகுடம் அல்லவா?

தனிநாயகம் அடிகளாரின் தொண்டு எனச் சிறப்பித்துச் சொல்வதற்கு ஏராளமான செய்திகள் உள்ளன. அதில் மிகச் சிறப்பானதாக நான் கருதுவது ஐரோப்பிய நாடுகளுக்கானத் தனது பயணங்களில் அங்குள்ள தமிழ் நூல்களையெல்லாம் தேடிச்சென்று பார்த்து அவற்றைப் பற்றிய குறிப்புக்களை எழுதி தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அவர் அளித்தமையே எனலாம்.

பாரிஸ் தேசிய நூலகத்தில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேலான தமிழ் நூற்களைத் தாம் பார்த்ததாகவும், அவற்றுள் சில இந்தியாவில் கூட

கிடைக்காதவை என்றும் அடிகளார் தமது குறிப்புக்களில் தந்துள்ளார். வாட்டிக்கன் நூலகத்தில் Flos Sanctorum என்ற பெயர் கொண்ட திருத்தொண்டர் திருமலர் என்ற நூலை இவர் கண்டெடுத்தார். அதுபோலவே கி.பி.17ம் நூற்றாண்டில் அந்தாம் தொப்ரோயென்சா அடிகளார் தொகுத்த தமிழ் போர்த்துக்கீசிய அகராதியையும் அடிகளார் இதே நூலகத்தில் கண்டெடுத்தார். கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்த நூலை அடிகளார் மீண்டும் பதிப்பித்து வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்த்துகலுக்கான தனது பயணத்தின் போது லிஸ்பன் நகர நூலகத்தில் அவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. 15ம் நூற்றாண்டில் தமிழகம் வந்த ஹென்றிக்ஸ் ஹென்றிக்ஸ் அடிகளாரால் எழுதப்பட்ட பல கையெழுத்துப் பிரதிகளையும், 1554ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கார்திலா என்ற நூலையும் அவர் கண்டார். தனி நாயகம் அடிகளாரின் முயற்சிகள் இல்லாவிட்டால் இந்த செய்திகளைத் தமிழ் உலகம் அறிந்திருக்குமா என்பது மிகப் பெரிய கேள்வியே!

இப்படிப் பல வகையில் தமிழுக்குத் தொண்டாற்றிய தனி நாயகம் அடிகளாரைப் பற்றி நம்மில் பலர் அறிந்திருக்கின்றோமா என்பது ஐயமே.

இவரை தமிழுலகம் போற்றிப்புகழ வேண்டாமா?

தமிழ்ப்பாட நூல்களில் இவரைப்பற்றிய குறிப்புக்களை இணைக்க வேண்டாமா?

அறிஞர் பெருமக்கள் இவரது தமிழ்த்தொண்டு பற்றி இக்கால இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது வேண்டாமா?

அவர் விட்டுச் சென்ற பணிகளைத்தான் தொடர வேண்டாமா?

இப்படிப் பல கேள்விகள் நம் முன்னே நிற்கின்றன. இதற்கு ஒரு ஆரம்பமாக அமுதன் அடிகள் தமிழ் மரபு அறக்கட்டளைக்காக வழங்கியிருக்கும் பல வரலாற்று விபரங்கள் அடங்கிய ஒரு மணி நேர விழியப் பதிவை தமிழ் அன்பர்கள் பார்த்து கேட்டுப் பயனுற வேண்டும் என்பதே எமது அவா. இந்தப் பதிவு https://www.youtube.com/watch?v=h2LIJmysyNo&feature=youtu.be

என்ற வலைப்பக்கத்தில் உள்ளது. கேட்டுப் பார்த்து பயன் பெறுவதோடு தனி நாயகம் அடிகளாரின் தமிழ்த்தொண்டினை நாமும் தொடர்வோமே!

தவத்திரு தனிநாயகம் அடிகளாரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

கு.சிதம்பரம்

முன்னுரை

கணியன் பூங்குன்றனாரின் "*யாதும் ஊரே! யாவரும் கேளிர்!*" எனும் வரிகளுக்கு ஏற்ப இன்று தமிழினமும் தமிழ் மொழியும் உலகமெல்லாம் பரந்து, விரிந்து, ஆலமரமாக உயர்ந்து, உயர்தனிச் செம்மொழியாக நிற்கின்றது. உலகமெல்லாம் தமிழ்த் தாய்க்கு புகழாரம் சூட்டப்படுகின்றது. உலகத் தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கும் தமிழர்களை ஒன்றிணைக்கும் பணிகளை செய்வதற்கும் இன்று ஒரு சில தமிழாய்வு நிறுவனங்களும், தமிழ்ச் சங்கங்களும்,தமிழாய்வு மன்றங்களும், பல்கலைக்கழகங்களும் சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (International Institute of Tamil Studies). இவ்வாய்வுக்கட்டுரையானது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம், நிறுவன உருவாக்கத்தில் தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு, நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள், நிறுவனத்தில் தனிநாயகம் அடிகளார் பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்/ஆய்வுகள் மற்றும் நிறுவனப் பதிப்புப் பணிகள் ஆகியன குறித்து விரிவாக ஆய்கின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தோற்றம்

தமிழ் மொழியியல், இலக்கியம்,தொன்மையியல், பண்பாட்டியல், சமூக மானுடவியல் எனப் பல துறைகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளவும், ஆய்வுக் கல்வியை வழங்கவும், பட்டங்கள் வழங்கவும் தகுதி மிக்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைப்பதைப் பற்றிச் சென்னை –இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது (1968) விவாதிக்கப்பட்டுள்ளது. அதற்கான முன்வரைவை பூனே தக்கானக் கல்லூரி –ஆராய்ச்சி நிறுவன

இயக்குநர் முனைவர் எஸ்.எம்.கத்ரே அவர்களால், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் அமைப்பியல் கூறுகள் என்னும் தலைப்பில் சென்னை – இரண்டாம் தமிழ் மாநாட்டின் போது எழுத்துரை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது; அவ்வெழுத்துரையின் முக்கியத்துவம் கருதி இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் இடையே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தேவை யாவை என்பது குறித்து மாநாட்டு குழுவினரால் அலசப்பட்டுள்ளது. அக்குழுவில் தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் சி.என் அண்ணாதுரை, அன்றைய கல்வி அமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், யுனெஸ்கோ இந்திய தேசிய ஆணையத்தின் அலுவலர் கே.சுப்பிரமணியம் போன்றோர் குழுமியோரில் குறிப்பிடத்தக்கவர்கள். இந்நிறுவனம் எவ்வாறு அமையவேண்டும் அதன் நோக்கங்கள் என்னவாக இருக்கவேண்டும் என்பது குறித்தும் அக்குழுவினரால் தமது கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பட்டங்கள் வழங்கும் கல்வி நிலையமாக நிறுவனம் ஆகிவிடலாகாது. தமிழக அரசு, இந்த நல்ல திட்டத்திற்கு நிதிநல்கும்- நற்றுணைப்புரியும் என்று அண்ணாவால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு தமிழகத்தின் தலைநகர் சென்னை, தரமணியில் 1970 அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் உதயமாகியுள்ளது - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். இது ஒரு தன்னாட்சி நிறுவனமாக, இன்று தமிழக அரசின் நிதி நல்கையுடன் வெகு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பங்களிப்பு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றத்திற்கு எவ்வாறெல்லாம் அடிகளார் தமது பங்களிப்பினைச் செலுத்தினார் என்பது உலகம் அறியும். ஒரு மரம் வேண்டுமென்றால் அதற்கு விதை இடவேண்டும் அதுபோல இந்நிறுவனத்திற்கு வித்திட்ட பெருமகனாரும் அடிகளாரே ஆவர் என்பது அறிஞர்களின் முடிபு.

தமிழ் இலக்கியத்தின் பெருமையினையும் தொன்மையினையும் தந்நிகரற்றத் தன்மையினையும் வெளிப்படுத்தியதோடு அதை உலகளாவிய நிலையில் பரப்ப முற்பட்டவர் தனிநாயகம் அடிகளார். தமிழிற்குச் செய்த தொண்டு அளவிடற்கரியது அவர் முயற்சியில் உருவானவையை உலகத்

தமிழ் ஆய்வு மன்றமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்.(இரபிசிங் 1999: VI)

உலகத் தமிழ் அறிஞரையெல்லாம் ஒன்று திரட்டும்,ஒருங்கிணைக்கும் பாலமாக,உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தையும் (1964) உருவாக்கினார். இம்மன்றத்தின் திட்டப்படி, உலகத் தமிழ் மாநாடுகள் நடத்திடவும்,சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்றவும் மூலக்காரணமாகத் திகழ்ந்தார் (விமலானந்தம் 2003: 2)

தவத்திரு தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தையும் உருவாக்கியவர்களில் ஒருவர். (இராமர் இளங்கோ 1997: IV)

உலகத் தமிழ் ஆய்வுத் துறையில் அடிகளார் தம் உலகப் பயணங்கள், தொடர்புகள், கட்டுரைகள்,விரிவுரைகள், நூல்கள், முத்திங்கள் இதழ், அரையாண்டு இதழ் என்று பலவகையிலும் தொடர்ந்து ஆற்றிவந்த பணிகளே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமாக வடிவம் பெற்றன என்பார் பேரா. வேலுப்பிள்ளை. (அமுதன் அடிகள் 1993 : 122)

அதேபோல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எவ்வாறு செயல்படவேண்டும். அதன் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தும் நித்தம் சிந்தித்தவர் அடிகளார். உலகத் தலைவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதியும் சந்தித்தும் ஆதரவைத் திரட்டியவர். பாரீஸ்- தமிழ் மாநாட்டில் நிறுவனம் குறித்த தமது வேண்டுகோளை அறிவித்தவர்; விதையையும் ஊன்றி நீரையும் ஊற்றியவர் அடிகளார் அவர்களே என்பது இதன் மூலம் அறியமுடிகிறது.

‘பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் பொதுச் செயலர் என்ற முறையில் தனிநாயகம் அடிகள் அவர்கள் சென்னையில் அமையவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ஆதரவு நல்குமாறு மலேசியாவின் அன்றைய கல்வி அமைச்சருக்கும், சிங்கப்பூரின் அன்றைய கல்வி அமைச்சருக்கும், ஆணையருக்கும் மடல் வரைந்து, பின்னணியில் பாடுபட்டு வரும் சென்னை ஆ. சுப்பையாவுக்கு 11 அக்.1968 இல் அனுப்பி, உரிய அம்மூவர்க்கும் அஞ்சல் செய்ய ஆற்றுப்படுத்தினார்.

வேண்டுகோள்: பாரிஸ் மாநாட்டின் நிறைவு அமர்வுக்குத் தலைமை தாங்கிய தனிநாயகர் நிகழ்ச்சி நிரலில் முதல் குறிப்பு: 1971 இல் கூட இருக்கும் யுனெஸ்கோ பொதுப் பேரவைக் கூட்டத்தில், சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தும் தீர்மானத்தை இந்தியா முன் மொழியும்போது, அதனை பிரான்சு ஆதரித்து வழிமொழிய வேண்டும் என பிரெஞ்சு தேசிய மேம்பாட்டு ஆணையத்திற்குப் பரிந்துரைக்கும் கருத்தை, அவையினர் ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டும் எனும் வேண்டுகோள், அவையினரால் பேராரவாரத்திற்கிடையில் நிறைவேற்றப்பட்டது.

அறிக்கை : தீர்மானம் நிறைவேறியதும், யுனெஸ்கோ நிதியுதவியுடன் ஆ. சுப்பையா, 14 நாடுகள் பயணித்து, அங்குள்ள பல்கலைக் கழகங்கள், பிற நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு, நிறுவனம் ஆற்றக் கூடிய நற்பணிகள் பற்றியும், அவற்றுக்கான வரவேற்பின் வளமை எத்தகையது என்பது பற்றியும் ஆராய்ந்து யுனெஸ்கோவுக்கு ஆய்வு அறிக்கை அளித்தார். அறிக்கையை ஏற்ற யுனெஸ்கோ, மூன்றாண்டுகளுக்கான திட்டங்களை வரைந்திடப் பன்னாட்டுப் பிரதிநிதிகள் குழுவினை அமைத்தது.

இரண்டுக்கும் இடையே: முன்னம் 1964 இல் தில்லியில் அமைத்த பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் இடையேயான தொடர்பினை வரையறுக்க ஐவர் குழு அமைக்கப்பெற்றது. அனைத்து குழுக்களிலும் அடிகளார் இடம் பெற்றார்.

நன்றி : இத்தருணத்தில் நிறுவனம் உருவாகக் கரு, கனா, காட்சி, உழைப்பு, விடாமுயற்சிகட்கெல்லாம் மூல காரணியாக இருந்து, வேராக விளங்கி முழுப் பொறுப்பும் ஏற்று நனவாக்க அரும்பாடுபட்ட ஆ. சுப்பையா அவர்கட்கு நன்றி பாராட்டினார் நாயகர். அவருடைய ஊக்கம், பார்வை, விடாத் தொடர் முயற்சி போன்றனவே இந்நிறுவனம் நிறுவப்பெறக் காரணிகளாய் இருந்தன என்பது மறத்தற்கில்லை என்றார்.

யாழ் மாநாட்டில்: யாழ்ப்பாணத்தில் நான்காம் உலகத்தமிழ் மாநாடு நடக்கும் போது உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுச் செயல்படவும் தொடங்கிவிட்டது. அம்மாநாட்டில் அடிகளாரின் தொடக்கவுரை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைய, பன்னாட்டுத் தமிழ் ஆய்வு மன்றம், தமிழக அரசு, யுனஸ்கோவின் இந்திய ஆணையம்

மூன்றும் உதவி புரிந்தன. சிறிய அளவில் நிறுவனம், தன் பணியினைத் தொடங்கியுள்ளது. எனினும் நாளடைவில் இது உலக நிறுவனமாக ஓங்கி வளரும்; உயர்ந்தோங்கி ஒளிரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. வெளிநாட்டு அறிஞர்களுக்கு உரிய வாய்ப்புகளை, இந்நிறுவனம் மூலமே நாம் வழக்கிட வேண்டும். பலகலைக்கழகங்கள்ள், பட்டங்கள் வழங்குவதில் கவனம் செலுத்திக் கொண்டு, ஆராய்ச்சியை, பட்டமேற்கல்வி நிறுவனங்களிடம் விட்டுவிடும். எனவேதான், இந்நிறுவனம் உலகளாவிய ஒருபெரும் நிறுவனமாக நிலவ வேண்டும் என்ற பேராவல் பூண்டுள்ளோம்' என்றார். (விமலானந்தம் 2003: 78,79)

நிறுவனத்தின் நோக்கங்கள்

- தமிழியல் உயராய்வினை வளப்படுத்துதல்,
- அயல்நாடுகளில் தமிழ்க் கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல்,
- தமிழாய்வாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை உருவாக்குதல், தமிழ், தமிழர், இலக்கியம்,வரலாறு, மருத்துவம், கல்வி, கலை, சமுதாயம், பண்பாடு மருத்துவம் எனத் துறைதோறும் தமிழாய்வை மேம்படுத்துதல்,
- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலையும் நூலகத்தையும் உருவாக்குதல்,
- உலகத் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழாய்வினை வளப்படுத்துதல்,
- உலக அளவில் நடந்துவரும் தமிழாய்வுகளை ஒருங்கிணைத்தல்,
- தமிழைத் தாய்மொழியாக்க கொள்ளாத பிற இந்திய மொழியினருக்கும் பிற நாட்டினருக்கும் தமிழ் கற்பித்தல்,
- உலகத் தமிழர்களின் அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய தரவுத் தளத்தை உருவாக்குதல்,
- தமிழின் பெருமையை அயலவருக்குச் சிறப்பாக எடுத்துரைத்தல்,

எனப் பல நோக்கங்களைக் கொண்டுள்ளது - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நிறுவனப் புலங்களும் பணிகளும்

தமிழ் உயராய்வு என்ற நிலையில் திகழும் இந்நிறுவனத்தில் நான்கு புலங்கள் செயல்பட்டு வருகின்றன. 1. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், 2. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம் 3. தமிழ் இலக்கியம் (ம) சுவடியியல் புலம் 4. அயல்நாட்டுத் தமிழர் புலம். இந்நான்கு புலங்களின் வழி இலக்கணம், இலக்கியம், தமிழர் சமூகம், தமிழர் பண்பாடு, மொழியியல், நாட்டுப்புறவியல் மொழிபெயர்ப்பியல், இலக்கிய இலக்கணப் பதிப்புகள், சுவடிப்பதிப்புகள், தமிழர் மரபு குறித்த ஆய்வுகள், பயனாக்க மொழியியல் ஆய்வுகள் அயல்நாட்டுத் தமிழர் (ம) தமிழ் இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் ஆகியவற்றை அந்தந்த புலங்களின் பேராசிரியர்களால் குறுந்திட்ட ஆய்வுகளாகவும் பெருந்திட்ட ஆய்வுகளாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துடன், உலகத் தமிழ் அறிஞர்களை ஒன்றிணைக்கும் வகையில் பன்னாட்டு/தேசிய கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், முதுகலை பட்ட வகுப்பு மற்றும் பட்டய வகுப்புகள் நடத்துதல், இளங்கலை அறிஞர் பட்ட மாணவர்களுக்கும், முனைவர் பட்ட மாணவர்களுக்கும் வழிகாட்டுதல் ஆகிய பணிகள் நிறுவனத்தில் செம்மையாக நடைபெற்று வருகின்றன. இத்துடன், தமிழைத் தாய்மொழியாக கொண்டிராதவர்களுக்கு தமிழ் கற்பித்தல் பணியும் சிறப்பாக நடந்துவருகின்றது.

நிறுவன நூலகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மிக இன்றியமையாத அமைப்பாக நூலகம் அமைந்துள்ளது. இந்நூலகத்தில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் நூல்களும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கிலம் மற்றும் பிற மொழி நூல்களும், ஓலைச்சுவடிக்களும், அரிய நூல்களும் உள்ளன. இது தவிர தினசரி, வார, மாத, காலாண்டு, அரையாண்டு, ஆண்டிதழ்களும் உள்ளன. மேலும், முனைவர் பட்ட ஆய்வேடுகளும் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகளும் இடம்பெற்றுள்ளன. இது தவிர கருத்தரங்குகள், மாநாடுகள், இலக்கிய நுட்பங்கள் தொடர்பான ஒளி, ஒலி, நாடாக்கள் சேகரிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

அறக்கட்டளைகள்

அறக்கட்டளைகள் நிறுவி அறஞ்செய்தல் தமிழரின் பண்பாட்டு மரபு. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களால் தமிழரின் இந்த பண்பாட்டு மரபைப் பின்பற்றும் வகையில் அன்பர்களையும் ஆர்வலர்களையும் நாடி அவர்களிடம் நிதிப்பெற்று 1983 இல் தொடங்கி நிறுவனத்தில் அறக்கட்டளைகளைகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு நிறுவனத்தில் அறக்கட்டளைப் பணிகளும் தொடங்கப் பெற்றன. ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் காலத்தில 14 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அவர்களைத் தொடர்ந்து, பின்னர் பொறுப்பேற்ற இயக்குநர்களாலும் இப்பணி தொடரப்பெற்றுள்ளது. இதன் பயனாக இன்று 35 அறக்கட்டளைகள் நிறுவனத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பெயரில் அமைந்த அறக்கட்டளையும் ஒன்று என்பது சிறப்பாகும்.

தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தவத்திரு தனிநாயகம் அடிகளாரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் 1992 இல் நிறுவனத்தில் '*தவத்திரு தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை*' நிறுவப்பட்டது. பல நல்ல உள்ளங்கள் வழங்கிய நிதியுதவியைக் கொண்டும், கும்பகோணம் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியஸ் ஆண்டகையும் தவபெருந்திரு குன்றக்குடி அடிகளாரும் வழங்கிய பொருளுதவியைக் கொண்டும், அமுதன் அடிகளார் அவர்களின் முயற்சியால், கிறித்துவத் தமிழ் இலக்கிய கழகத்தால், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தனிநாயகம் அடிகளார் பெயரில் அறக்கட்டளை நிறுவி ஆண்டுதோறும் '*தனிநாயக அடிகள் கிறித்துவத் தமிழ் இலக்கியங்கள்*' எனும் பொருண்மையில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆற்றப்பட வழிவகை செய்யப்பட்டது. அடிகளரின் பெயரில் அமைந்த இந்த அறக்கட்டளையின் சார்பில் இதுவரை ஆறு சொற்பொழிவுகள் நடைபெற்று அப்பொழிவுகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

சொற்பொழிவு 1 : அடிகளார் அறக்கட்டளையின் முதல் சொற்பொழிவினை 1992 ஆண்டு '*தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் பணியும்*' எனும் தலைப்பில் அமுதன் அடிகள் அவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இப்பொழிவு தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையையும், ஆற்றிய தமிழ்த் தொண்டினையும், இதழியல் பணிகளையும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி இப்பொழிவு நிகழ்த்தப்பட்டுள்ளது.

சொற்பொழிவு 2 : '*தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள்*' எனும் தலைப்பில் ம.செ. இரபிசிங் அவர்களால் 1995 ஆம் ஆண்டில் பொழிவு நிகழ்த்தப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய ஆய்வை விரிவுபடுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் எந்தெந்த முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை வெளிப்படுத்தும் விதமாகவும் தமிழ் இலக்கியத்தின் தொன்மையினை, பெருமையினை வெளிக் கொணர்வதில் எத்தகைய விடா முயற்சியும், ஆர்வமும் கொண்டிருந்தார் என்பதை மெய்பிக்கும் வகையில் இச்சொற்பொழிவு அமைந்துள்ளது.

சொற்பொழிவு 3: '*தனிநாயகம் அடிகளின் இதழியல் வழித் தமிழ்ப்பணி*' எனும் தலைப்பில் முனைவர் ப.இறையரசன் அவர்களால் 1995 ஆம் ஆண்டு இவ்வறக்கட்டளையின் மூன்றாவது சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டுள்ளது. இப்பொழிவு தவத்திரு தனிநாயக அடிகளார் தாமே முன்னின்று நடத்திய ஆங்கிலம் மற்றும் தமிழ் இதழ்களைப் பற்றியும் அவருடன் தொடர்புடைய பிற இதழ்களைப் பற்றியும் விரிவாக அலசப்பட்டுள்ளது.

சொற்பொழிவு 4 : இவ்வறக்கட்டளையின் நான்காவது பொழிவு 2003 ஆம் ஆண்டு '*உலக அரங்கில் தமிழ்*' எனும் தலைப்பில் மது.ச. விமலானந்தம் அவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது. உலக நாடுகளில் எல்லாம் தமிழ் ஒலிக்கும்படி செய்த அடிகளாரின் பணிகள் குறித்து விவதிக்கப்பட்டு நூலக வெளியிடப்பட்டுள்ளது.

சொற்பொழிவு 5 : '*விவிலியத் தமிழ்*' எனும் தலைப்பில் முனைவர் ஆ .ஆலீஸ் அவர்களால் ஐந்தாவது பொழிவினை 2004 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்டுள்ளது.. விவிலியத் தமிழின் நிறை குறைகளை

ஆராயும் இவ்வாய்வு சமய உள்ளடக்கம், தெரிவிக்கப்படும் நெறிமுறைகள் ஆகியவற்றை இனங்காண உதவுவதுடன் அச்சமயக் கருத்துத் தெரிவிப்பில் 'கருத்து 'கேட்போர்' 'கூற்று நிகழ்த்துவோர் ஆகியோர்க்குரிய பங்கினையும் தெளிவாக புலப்படுத்தும் விதத்தில் இப்பொழிவு அமைந்துள்ளது.

சொற்பொழிவு 6 : *'தலித் அறம்'* எனும் தலைப்பில் அரங்க மல்லிகா அவர்களால் இவ்வறக்கட்டளையின் ஆறாவது பொழிவு நிகழ்த்தப்பட்டுள்ளது. தலித் அறம், விளைம்பு நிலை மக்கள் குறித்து இப்பொழிவு அமைந்துள்ளது. இப்பொழிவு அறக்கட்டளையின் பொருண்மையிலிருந்து முற்றாக விலகி அமைந்துள்ளது.

தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு சிறப்புச் சொற்பொழிவு

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டை முன்னிட்டு நிறுவனத்தில் அடிகளார் நூற்றாண்டுச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டது. பொழிவு 14.06.2013 அன்று நிகழ்த்தப்பட்டது. பொழிவினை ஆக்ஸ்போர்டு, ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் ஊடகவியலாளரும் கல்வியியல் ஆய்வாளருமான திருமதி நீற்றா பற்றிமாகரன் அவர்களால் *மானிடம் போற்றும் தனிநாயகம் அடிகள்* எனும் தலைப்பில் நிகழ்த்தப்பட்டுள்ளது. இப்பொழிவு மானிடம் போற்றும் தனிநாயக அடிகளின் பண்புகள் வெளிபட்ட விதங்கள் மற்றும் மானிடம் தனிநாயக அடிகளைப் போற்றுகின்ற விதங்கள் குறித்து மிக விரிவாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளது.

நிறுவனப் பதிப்புப் பணிகள்

தமிழாய்வையும் வெளியீட்டையும் தலையாய பணியாகக் கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1975 இல் தனது நூல் வெளியீட்டைத் தொடக்கியது. ச.வே. சுப்பிரமணியன் எழுதிய 'தமிழில் விடுகதைகள்' எனும் நூல் நிறுவனத்தின் முதல் வெளியீடாகும். அதன் தொடர்ச்சியாக இதுவரை 751 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஓலைச் சுவடிகள் பதிப்பிலும் அரிய நூல்களின் மறு பதிப்பிலும் நிறுவனம் தனிக் கவனம் செலுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தனிநாயகம் அடிகளாரின் நூல்கள் மறுபதிப்பு

இந்நிறுவனத்தைத் தோற்றுவிக்க காரணமாக இருந்த அப்பெருமகநாரின் நூல்கள் இன்று கிடைப்பதற்கரியதாக உள்ளன. எனவே இந்நிறுவனம் அவருடைய நூல்களை மறுபதிப்பு செய்வதைகயும் கடமையாகக் கொண்டு கீழ்வரும் ஐந்து நூல்களை இதுவரை மறுபதிப்புச் செய்துள்ளது. ஒரு வகையில் அடிகளாருக்கு நிறுவனம் செய்யும் நன்றிக் கடனாகக் கூட இதைக் கருதலாம் என்பார் நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் இராமர் இளங்கோ. நிறுவனத்தால் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ள அடிகளாரின் நூல்கள் :

1 . Landscape and poetry: A Study of Nature and Classical Tamil Poetry (1997)

2. Tamil Culture and Civilization (1997)

3. தமிழ்த் தூது (1998)

4. Collected Papers of Thani Nayagam AdiGal(1995)

5. தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் (2002)

நிறுவன 'தமிழியியல்' ஆய்வு இதழ்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது கூடிய அறிஞர் பெருமக்களால், புதியதோர் தமிழாய்வு இதழினைத் தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஏடாக – அரையாண்டு இதழாக' தமிழ் ஆராய்ச்சி இதழ் (Journal of Tamil Studies) 1969 இல் வெளிவந்துள்ளது. மூலக்காரணம் அடிகளாரே. முதலாமாண்டு இரு இதழ்களிலும், தமிழ் ஆராய்ச்சி மன்றம், இரண்டாமாண்டு இரு இதழில்,உலகத் தமிழ் ஆராய்ச்சி நெறிமுறைகள், வரைவுகள், குழுக்கள் முதலியன விரிவாகத் தரப்பட்டுள்ளன. அடிகளார் பொறுப்பில் ஈராண்டு நான்கு இதழ்கள் வெளிவந்துள்ளன. மூன்றாம் ஆண்டு முதல் (1972.செப்.) உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இதழாக வெளிவரத் தொடங்கி தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கின்றது. இதுவரை 82 ஆய்வு இதழ்கள் வெளிவந்துள்ளன. இவ்வாய்வு இதழின் கட்டுரைகள் நிறுவன

வலைத்தளத்திலும்(http://www.ulakaththamizh.org) வலையேற்றம் செய்யப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கிய நாள் முதல் தனது இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிறுவனத்தின் முயற்சியால் இதுவரை பதிநான்கு நாடுகளில் தமிழ் இருக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் ஒரு சில பல்கலைக்கழகங்களில் திருக்குறள் துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், உலகம் முழுவதிலும் இருந்து அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் நிறுவனத்திற்கு வருகை தந்து தமிழாய்வுகளையும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும், சிறப்புச் சொற்பொழிவுகளையும் வழங்கி வருகின்றனர். நிறுவனத்திற்கு கமில் வி. ஸ்வல்பில், அலெக்சாண்டர் டுபியன்ஸ்கி, ஆ.வேலுபிள்ளை ஒனோ தோரோ, க.சிவத்தம்பி, ஜோன்னா குசியோ, முரசு நெடுமாறன், அய்யாதுரை தாமோதரன் ஆகிய அயல்நாட்டு ஆய்வறிஞர்கள் நிறுவனத்திற்கு வருகை அறிஞர்களாக(visiting research fellow) வந்து ஓரிரு ஆண்டுகள் தங்கி பணியாற்றிச் சென்றுள்ளனர். நிறுவனப் பேராசிரியர்களும் அயல்நாடுகளுக்கு வருகை ஆய்வறிஞர்களாக சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தில் இதுவரை மொழியியல் ஆய்வுகள், தமிழியல் ஆய்வுகள், ஒப்பீட்டாய்வுகள், மானிடவியல் ஆய்வுகள் என பல்துறை சார்ந்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பணிகளைப் பறை சாற்றும் வகையில் நிறுவனம் வெள்ளி விழா ஆண்டைக் கடந்து பொன் விழா ஆண்டை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கிறது. மேலும், நிறுவனம் சந்திக்க வேண்டியதுமாகவும் சிந்திக்க வேண்டியதுமாகவும் எண்ணற்ற பணிகள் இருக்கின்றன என்பதும் தெளிவு.

உதவிய நுல்கள்

- **அமுதன் அடிகள் (1993)** ***தனிநாயகம் அடிகள், உலகத் தமிழாராய்ச்சி*** **நிறுவனம், சென்னை -113**
- **இரபிசிங் ம.பி.(1999)** ***தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள், உலகத்*** **தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -113.**

- இராமர் இளங்கோ. ச.சு. (1993) அணிந்துரை, *தனிநாயகம் அடிகளின் இதழியல் வழித் தமிழ்ப் பணி*–பா.இறையரசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை-113.
- விமலானந்தம்,மது.ச.(2003) *உலக அரங்கில் தமிழ்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை -113

குறிப்பு ; இக்கட்டுரை 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இலண்டனில் நடைபெற்ற உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் வாசிக்கப்பட்டது.

- முனைவர் கு.சிதம்பரம், உதவிப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,சென்னை

இன்று என்ன?

பன்மொழிப் புலவர்: தனிநாயகம்

https://www.hindutamil.in/news/vetrikodi/today-special/1116201-today-special.html



ஈழத்து தமிழறிஞர், கல்வியாளர் சேவியர் தனிநாயகம் அடிகளார் 1913-ம் ஆண்டு இலங்கையில் யாழ்ப்பாணம் கரம்பொன் என்ற கிராமத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் பள்ளியில் படித்தார். 1931 முதல் 1934 வரை ஆங்கிலம், இலத்தின்,

இத்தாலியம், பிரெஞ்சு, ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தொடர்ந்து உருசியம், கிரேக்கம், இபுரு, சிங்களம் மொழிகளைக் கற்றுத் தேர்ந்து பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

1945-ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் படித்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். இவரது இலக்கியக் கட்டுரைகளின் முதல் தொகுப்பு "தமிழ்த் தூது" 1952-ல் வெளியிடப்பட்டது. 1961-ல் அவர் மலாய் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய தொடர் சொற்பொழிவு "திருவள்ளுவர்" என்ற பெயரில் 1967-ல் நூலாக வெளிவந்தது. நெடுந்தீவு மக்கள் தனிநாயகம் அடிகளுக்கு ஆளுயர சிலை அமைத்தனர். 1980 செப்டம்பர் 1-ம் தேதி இயற்கை எய்திய தனிநாயக அடிகளாருக்கு 1981-ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கி கவுரவித்தது.

உலகத் தமிழராய்ச்சி மன்றம் அமைப்பதற்கு வழிகோலியவர் தனிநாயகம் அடிகளார் அவர்களே

https://www.ilakku.org/%E0%AE%89%E0%AE%B2%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%AE%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%AE/

1913ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் கரம்பொன் என்னுமிடத்தில் கணபதிப்பிள்ளை நாகநாதன் ஸ்ரனிஸ்லாஸ், சிசீலியா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மூத்த மகனாக சேவியர் பிறந்தார். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலே ஆரம்பக் கல்வியை தொடங்கினார். 1923ஆம் ஆண்டு தொடக்கம் 1930ஆம்

ஆண்டு வரை தனது மேற்படிப்பை யாழ். சென்.பத்திரிசியார் கல்லூரியில் தொடர்ந்தார்.

இக்காலகட்டத்தில் ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழி, ஆங்கில கவிதைகள், ஆகியவற்றில் நாட்டம் ஏற்பட்டது. அவரின் பன்னிரெண்டாவது வயதில் அவரின் தாயார் இறந்தார். அதன் பின்னர் அவர் தான் ஒரு குருவானவராக வரவேண்டும் என எண்ணினார். இதற்குக் காரணம் தோல்ஸ்டோய் என்பவரின் உயிர்ப்பு என்ற நாவல் தன்னுடைய உள்ளத்திலே ஏற்படுத்திய தாக்கம் தான் காரணம் என்று தெரிவித்தார்.

அந்த வாக்கியம் "ஒரேயொரு முறை தான் இவ்வுலகில் நான் பயணிப்பேன். இக்காலத்தில் ஏதாவதொரு நற்செயலை என்னால் செய்ய முடியும் என்றால், இன்னொரு உயிருக்கு என்னால் அன்பு காட்ட முடியும் என்றால், அதை நான் இப்போதே செய்யப் போகிறேன். ஏனென்றால், மீண்டும் ஒரு தடவை இவ்வுலகில் நான் கால் பதிக்க மாட்டேன்" என்பதே அந்த வாக்கியம்.

1931ஆம் ஆண்டு தனது குருத்துவக் கல்வியை மேற்கொள்வதற்காக கொழும்பிலுள்ள பேணாட் குருமடத்திற்குச் சென்றார். அங்கே மெய்யியலைக் கற்றதுடன், உயிரோட்டமுள்ள ஓர் எழுத்தாளனாகவும் திகழ்ந்தார். உரோமாபுரிக்குச் சென்று இறையியல் கல்வியைத் தொடர அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதேவேளை, அவரை ஆதரித்த கியோமர் ஆண்டகை அவரை தொடர்ந்து ஆதரிக்க மறுத்து விட்டார்.

இந்த வேளையில் அவருக்கு ஆதரவு தெரிவித்தவரகள் யாழ். சென் பத்திரிசியார் கல்லூரி அதிபர் சாள்ஸ் மத்தியுஸ் அடிகளார் மற்றும் சாள்ஸ் லோங் அடிகளார் ஆவர். இவர்களின் ஆதரவுடன் கேரளாவில் உள்ள சீரோ மலங்கார் ஆயரான மேதகு மார் இவானியூஸ் ஆண்டகை அவர்கள் சேவியர் அவர்களை உரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார்.

1934ஆம் ஆண்டு 21 வயதான சேவியர், தனது இறையியல் கல்வியை தொடர்வதற்காக கடல் வழியாக உரோமாபுரிக்கு பயணமானார். 1938 மார்ச் 19ஆம் திகதி உரோமாபுரியில் குருவாக

திருநிலைப்படுத்தப்பட்டார். இக்காலகட்டத்திலேயே தமிழ் மொழி மீதான ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. அங்கே வீரமாமுனிவர் கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.

அத்துடன் வத்திக்கான் வானொலியிலும் தமிழ் மொழி பிரிவில் பணியாற்றினார். 1939ஆம் ஆண்டு ரோமில் தனது இறையியற் கல்லூரியை நிறைவு செய்த சேவியர் தன்னை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்த இவானியூஸ் ஆண்டகையின் மறைமாவட்டத்திலே பணியாற்றுவதற்காக கேரளா, திருவனந்தபுரம் சென்றார். அங்கு பணியாற்றுவது அவருக்கு ஒத்துவரவில்லை.

இதனால் தனிநாயம் அடிகளார் இவானியூஸ் ஆண்டகையின் அனுமதியில்லாமலே உரோமாபுரிக்கு மீண்டும் செல்வதற்குத் தீர்மானித்தார். பின்னர் மேதகு திபூஸியஸ் ஆண்டகை அவர்களின் மறைமாவட்டமான தூத்துக்குடியில் சேவியர் அவர்கள் தனது குருத்துவப் பணியைத் தொடர உரோமாபுரியிலுள்ள அவரது பேராசிரியர் அவருக்கு வழிசமைத்துக் கொடுத்தனர்.

1941ஆம் ஆண்டு சேவியர் அவர்கள் தனக்கு தமிழ்ப் பெயரை சூட்டுவதற்கு விரும்பி தனது தந்தையுடன் கலந்தாலோசித்து தந்தை வழி மூதாதையாரான தனிநாயகம் என்ற பெயரை சூட்டிக் கொண்டார். தூத்துக்குடி, வடக்கன்குளம், அத்துடன் புனித திரேசா கல்லூரியில் உப அதிபராக பதவியேற்றார். அக்காலப்பகுதியிலேயே தமிழை உரிய முறைப்படி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது. தூத்துக்குடியிலுள்ள சுப்பிரமணியம் பண்டிதரிடம் தமிழ் மொழியை முறைப்படி கற்கத் தொடங்கினார்.

ஆண்டு 32 வயதிலே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணவனாக சேர்ந்து கொண்டார். இங்கு கல்வி கற்ற காலப்பகுதியில் பல்வேறு தமிழ் அறிஞர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பு தனிநாயகம் அடிகளாருக்கு கிட்டியது. 1947இல் தமிழ் மொழியில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கல்வி கற்று 1949இல் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் சிதம்பரனாரின் ஆதரவுடன் `பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் விடயம் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டார். இந்த ஆய்வு பின்னர் நூலாக வெளியிடப்பட்டது. இந்த நூலை ஆய்வு செய்த கபில் சுவெலபேல் அவர்கள், பழந்தமிழ் இலக்கியத்தில் இதுவரை எழுதப்பட்டவற்றை இந்நூல் விஞ்சி நிற்கிறது எனப் பாராட்டுத் தெரிவித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலப்பகுதியில் தான் அடிகளாருக்கு இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டது. 1949 – 1951 வரை மலேசியா சீனா யப்பான், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தென்னமெரிக்காவிலுள்ள பனாமா, ஈகுவாடோர், பெரு, சிலி, ஆஜென்டீனா, உருகுவே, பிறேசில், மெக்ஸிகோ, மேற்கிந்திய தீவுகளான திரினிதாத், ஜமேய்க்கா, மார்த்தீனிக், மத்திய ஆபிரிக்கா, வட ஆபிரிக்கா, இத்தாலி, பாலஸ்தீனம், எகிப்து, போன்ற பல நாடுகளுக்கும் பயணம் செய்து, தமிழ் மொழி, கலை, வரலாறு பற்றி அடிகளார் உரையாற்றினார்.

இந்தப் பயணத்தை முடிவு செய்து இந்தியாவிற்குத் திரும்பிய வேளையிலே, வெளிநாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் மத்தியில் தமிழாய்வு பற்றிய ஈடுபாட்டைத் தோற்றுவிக்கவும், பல்வேறு நாடுகளில் வாழும் பல்வேறு அறிஞர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் ஆங்கிலத்தில் ஒரு இதழ் தேவையென்பதை உணர்ந்து கொண்டார். இதற்காக `தமிழ் கல்ச்சர்' ('Tamil Culture') என்ற இதழை 1952 பெப்ரவரியிலிருந்து வெளியிடத் தொடங்கினார். பல்வேறு நாடுகளில் வாழும் தமிழாய்வில் ஈடுபடும் பல்வேறு அறிஞர்களை ஒன்றிணைக்க இந்நூல் சிறந்ததாக விளங்கியது.

1952ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்று 1961ஆம் ஆண்டுவரை இந்தப் பணியை அவர் தொடர்ந்து ஆற்றினார். கல்விக் கொள்கைகள், தமிழ் மொழியை கற்பிக்கும் முறைகள், சமூகக் கல்வியியல் போன்ற தலைப்புகளில் விரிவுரையாற்றியிருந்தார். பல்கலைக்கழகத்தில் இன, மத வேறுபாடுகள் இன்றி அடிகளார் அனைவருடனும் நன்றாகப் பழகினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பித்த போது, அங்கு தமிழ் ஆர்வத்தை வளர்ப்பதிலும், ஆராய்ச்சி உணர்வை ஊக்குவிப்பதிலும் முன்னின்று செயற்பட்டார். இதற்கிடையில் 1955 – 1957 காலப்பகுதியில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் `பழந்தமிழ்ச் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். இதனையடுத்து இலங்கை திரும்பிய அடிகளார், முதுநிலை விரிவுரையாளராக பதவியுயர்வு பெற்றார்.

இலங்கையில் தொடர்ந்து பணியாற்ற முடியாத சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. ஈழத் தமிழர் சமவுரிமை கோரி நடத்திய போராட்டத்தை ஆதரித்தார். 1961ஆம் ஆண்டு காலிமுகத்திடலிலே நடத்திய சத்தியாக்கிரகத்திலே அடிகளார் பங்குபற்றினார். இதற்காக அடிகளார் அரசியலில் ஈடுபடுகின்றார் என்று அப்போதைய இலங்கை அரசு தவறாக எண்ணியது, இதனால் அவர் தனது பல்கலைக்கழகப் பணியை துறந்துவிட தீர்மானித்தார்.

அதன் பின்னர் 1961ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டு வரை மலாயா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை தலைவராக பணியாற்றினார். அடிகளாரின் முயற்சியால் பல்கலைக்கழகத்தில் பல்வேறு தமிழ் மொழி ஆய்வுகள் மேற்கொள்ள வழிவகுத்தார். அடிகளாரின் முயற்சியால் மலாயா பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறை உலகப் புகழ் பெற்றது. இவ்வாறான தனது செயற்பாட்டினால், தனிநாயகம் அடிகளார் மலாயா பல்கலைக்கழகத்தில் சிறந்த பேராசிரியர்களுள் ஒருவராக திகழ்ந்தார்.

1964ஆம் ஆண்டு கீழ்த்திசை அறிஞர்களின் மாநாடு டில்லியில் நடைபெற்ற போது, உலகத் தமிழராய்ச்சி மன்றம் நிறுவப்பட்டது. அதற்காக முன்னின்று உழைத்தவர் தனிநாயகம் அடிகளாரே ஆவார். இந்த மன்றத்தின் செயலாளராக அவரே தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

1964 ஏப்ரல் 17 – 23ஆம் திகதி வரை தனிநாயகம் அடிகளார் தலைமையில் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு மலாயா பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக நடந்தேறியது. 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள்

இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இங்கு முன்வைக்கப்பட்டிருந்த கட்டுரைகள் ஆங்கில மொழியில் இடம்பெற்றிருந்தாலும், தமிழ் மொழியிலும் ஆய்வுக்கட்டுரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. உலகத் தமிழராய்ச்சி மாநாடு என்பது முற்றுமுழுதாக தனிநாயகம் அடிகளாரின் சிந்தனையில் உதித்த எண்ணக்கரு என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

தனிநாயகம் அடிகளாரின் குருத்துவ வாழ்வு தன்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்து வாழும் முக்தியை அவருக்கு கொடுத்தது. தமிழ் மொழிக்கு பணியாற்றுவதை இறைபணியாகவே அவர் கருதினார். நாற்பத்து மூன்று நாடுகளிலிருந்து வந்த 250 மாணவர்களுடன் ஐந்து ஆண்டுகள் இணைந்து வாழ்ந்த அனுபவம் ஒரு விரிந்த, பரந்த பார்வையை அடிகளாருக்குத தந்தது. அடிகளார் கற்றுத் தேர்ந்த பன்மொழிப் புலமை உலகின் பல பாகங்களில் உள்ள மக்களுடனும், அவர்களுடைய இலக்கியம் பண்பாடுகளுடன் இலகுவாக தொடர்பை ஏற்படுத்த அவருக்கு உதவியது.

தனது வாழ்நாளில் 51 நாடுகளை அவர் தரிசித்திருக்கின்றார். அவர் செல்லும் நாட்டில் அந்த நாட்டு மொழியிலேயே உரையாற்றும் திறன் பலரையும் ஈர்க்கும் ஒரு விடயமாக இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே அவரது வாழ்வும் ஆய்வும் பல்வேறு தமிழறிஞர்களுடைய தொடர்பையும் நட்பையும் அவருக்குப் பெற்றுத் தந்தது. அவர் வெளியிட்ட `தமிழ்க் கல்ச்சர்' முத்திங்கள் இதழ் உலகத் தமிழரிடையே ஒரு உறவுப் பாலமாக அமைந்தது.

தூத்துக்குடி ஆயர் மேதகு திபூசியஸ் றோச் ஆண்டகை தனிநாயகம் அடிகள் சுதந்திரமாக தனது தமிழ்மொழித் தேடல்களை மேற்கொள்ளவும், அதற்காக உலகம் பூராவும் பயணம் செய்யவும் வேண்டிய அனுமதியை அவருக்கு அளித்திருந்தார். இவை அத்தனையும் தான் தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரை, எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியை உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற உயர்ந்த தளத்துக்கு எடுத்துச்செல்ல அவரை இட்டுச் சென்றன

எழுத்து வடிவம் கல்யாணி.

காணொளிகள்

01] **தனிநாயகம் அடிகள் விரிவாகும் ஆளுமை**
https://www.youtube.com/watch?v=IDe6GH6HBzs [29:04]

02] **தனிநாயகம் அடிகள் - பிறந்த நாள் சிறப்புரை: அருட்தந்தை. அமுதன் அடிகள்**
https://www.youtube.com/watch?v=Xk7dRM4KE8Q [1:28:55]

03] **தனிநாயகம் அடிகள்**
https://www.youtube.com/watch?v=h2LIJmysyNo [35:03]

04] **கவிதைப் பேழை விரிவாகும் ஆளுமை - தனிநாயகம் அடிகள்**
https://www.youtube.com/watch?v=5eDMWQCpdcM [28:16]

05] **ஐம்பது ஆண்டு தொல்லியல் அனுபவங்கள்: முனைவர் நா. மார்க்சிய காந்தி**
https://www.youtube.com/watch?v=EVR21qMUxso [1:57:43]
நாட்டின் முதல் பெண் தொழில்முறை கல்வெட்டு ஆய்வாளர் மதிப்பிற்குரிய முனைவர் மார்க்சிய காந்தி அவர்கள் 1.1.1973 அன்று தன் தொல்லியல் பயணத்தைத் தொடங்கினார். கிட்டத்தட்ட ஐம்பதாண்டு காலம் துறை சார்ந்து இயங்கியுள்ளார், இன்றும் இயங்கிக்கொண்டு இருக்கிறார். இத்திசைக்கூடல் இணையவழி நிகழ்வில், தன் ஐம்பது ஆண்டு தொல்லியல் அனுபவங்களை அவர் நம்முடன் பகிர்ந்து கொள்வார்.





(😊)(😊) **தனிநாயகம் அடிகளார்** (😊)(😊)